# வாட்டர் கார் விவகாரம் - சுஜாதா

'அன்புள்ள டாக்டர் ராகவானந்தம்,

உங்கள் 16-8-73 தேதியிட்ட விண்ணப்பம் கிடைக்கப் பெற்றோம். நீங்கள் குறிப்பிட்ட முறைப்படி தானியங்கும் ஊர்தியன்றைத் தயாரிப்பது விஞ்ஞான முன்னேற்றத்தின் தற்போதைய நிலையில் சாத்தியம் இல்லை என்று அரசாங்கம் நம்புவதால் உங்கள் விண்ணப்பத்தை ஏற்பதற்கில்லை.

இக் கடிதம் உங்கள் 17-8-73 தேதியிட்ட ஞாபகக் கடிதத்தையும் தீர்வு செய்கிறது.

உங்கள் விசுவாசமுள்ள

கூப்சந்த்

காரியதரிசி, இந்திய அரசாங்க வர்த்தகத் தொழில் துறை அமைச்சகம்.'

சிங்க முத்திரைக் கடிதத்தை மடித்தேன். எதிரே டாக்டர் ராகவானந்தம் சிவந்த மூக்குடன் நின்றிருந்தார்.

"நான் இவர்களுக்கு எழுதியது தப்பு. சுப்ரமணியத்துக்கு நேராக எழுதி இருக்க வேண்டும்."

"நீங்கள் என்ன எழுதியிருந்தீர்கள்?"

"ஒரு கார் தயாரிப்பதற்கு லெட்டர் ஆஂப் இன்டெண்ட் கேட்டிருந்தேன்."

"கார் தயாரிப்பதற்கா? பேஷ். பெட்ரோல் விற்கிற விலையில் இப்போது எதற்கு என்று அவர்கள்..."

"என் கார், வாட்டர் கார். அதற்கு பெட்ரோல் வேண்டாம்.'

"புரிந்தது, போட் மாதிரியா? பரிசல், ஓடம் மாதிரியா?"

"இல்லை. தரையில்தான் ஓடும். பெட்ரோலுக்குப் பதில் தண்ணீர். ஜஸ்ட் வாட்டர்."

"டாக்டர், எங்கே அந்த கார்? நான் ஓட்டிப்பார்க்க வேண்டும்."

டாக்டர் தன் இடது புருவத்துக்கு ஒரு சென்டிமீட்டர் மேலே தட்டி, "இங்கேதான் இருக்கிறது. இரண்டு மாதம் பொறு. டிசைன் தயாராகிவிட்டது. எனக்கு வேண்டியது ஒரு பட்டறை, ஒரு மெக்கானிக், ஒரு வெல்டிங் செட். பொறு."

டாக்டர் அவர்கள், தன் வாட்டர் கார் வேலை செய்யப் போகிற விதத்தை எனக்கு விளக்கியபோது நான் அயர்ந்துபோய் விரலில் மூக்கை வைத்து, "ஒண்டர்ஂபுல் டாக்டர். கை கொடுங்கள்" என்று அவர் கையைப் பற்றிக் குலுக்கினேன். "இது நிச்சயம் வேலை செய்யும். கையில் என்ன டாக்டர் பிசுபிசு என்கிறது-திருநெல்வேலி அல்வா மாதிரி?"

"வஜ்ரப் பசை. என் முதல் மாடலை என் சொந்தச் செலவிலேயே தயாரிக்கப்போகிறேன். தயாரித்து பத்திரிகைக்காரர்களைக் கூப்பிட்டு அவர்களை காரில் அழைத்துச் சென்று, 'இதோ பார், இதற்குத்தான் அரசாங்கம் அனுமதி தர மறுத்துவிட்டார்கள்' என்று சொன்னால்..."

"அப்புறம் இந்திராவிடமிருந்து போன். 'டாக்டர், ஐயாம் எக்ஸைட்டட்...' "

"விஷயத்தை உனக்குள்ளேயே வைத்துக்கொள். ஐடியாவைத் திருடிவிடுவார்கள். அப்புறம் சந்திக்கலாம்" என்று என்னை வெளியே தள்ளி அறைக் கதவைத் தாளிட்டுக்கொண்டார்.

அந்த மேதையை நினைத்துக்கொண்டே நடக்கையில் மோதிக்கொண்டேன், மாலதியின் மேல்.

"ஹலோ மாலதி..."

அவள் தன் ஆண்பிள்ளைச் சட்டையை உதறிக்கொண்டாள். "யார் நீங்கள்?"

நான் என் தலைமுடியைப் பிரித்துக் காட்டினேன்.

"யூ?"

"ஆம்! அதே யூ. யுவர்ஸ் ட்ரூலி."

"மேலே மயிர் ஜாஸ்தி வளர்த்திருக்கிறாய். எங்கே வந்தாய்?"

"உன்னிடம் ஒரு ரகசியம் சொல்ல வேண்டும்."

"என்ன..? நீ மூன்று மாதம் முழுகாமல் இருக்கிறாயா?"

"ஹ்ஹ. சிரித்தாகிவிட்டது. இனி ரகசியம். உன் அப்பா இன்னும் இரண்டு மாதத்தில் லட்சாதிபதி ஆகிவிடுவார்."

"அடுத்த மாதம் அப்பா லட்சாதிபதியாவதை விவித் பாரதியில் நிரோத் விளம்பரம் போல நிறைய தடவைக் கேட்டாகிவிட்டது."

"டாக்டர், அவர்கள் இந்தத் தடவை ஒரு தங்கச் சுரங்கத்தைக் கண்டுபிடித்திருக்கிறார். பெட்ரோல் இல்லாமல் போகும் கார்."

"தள்ளினால் எல்லா காரும் போகும்."

"ச்ச்ச். இரண்டாவது உலக யுத்த ஜோக். டாக்டரின் கார் தண்ணீர் சக்தியால் போகிறது. ஹைட்ராலிக் டர்பைன் பிரின்சிபிள் தெரியுமா உனக்கு?"

"தெரியாது. தேவை இல்லை. நீயும் அப்பாவும் சேர்ந்து அடித்த கூத்தெல்லாம் நான் மறக்கவில்லை. உன் மாதிரி மறை கழன்ற ஆசாமிகளுடன் பேச எனக்கு நேரமில்லை. உனக்கு வேறு வேலை இல்லை என்றால் பனகல் பார்க்கில் சிமென்ட் பெஞ்ச்சில் உட்காரப் போ."

அது நிகழ்ந்து ஒரு மண்டலம் வரை, என்னால் டாக்டர் அவர்களைச் சந்திக்க முடியவில்லை. ஒரு மாலை பெரியண்ணன் கடையில் மசாலா டீ சப்பிக்கொண்டு இருந்தபோது, என் எதிரே அரை வேஷ்டியை முண்டாசாக அணிந்து, காதில் பீடி செருகி இருந்த சைக்கிள் ரிக்ஷா ஓட்டி ஒருவனும் அவன் நண்பனும் பேசிக்கொண்டு இருந்தது என் கவனத்தைக் கவர்ந்தது.

"நாளைக்குத்தான்டா ஓடுதாம்."

"இன்னாடா?"

"காரு. தண்ணி போட்டா ஓடுதாம். ஒரு கெய்வன் கண்டுபிடிச்சிருக்கானாம். இத பார், போட்டிருக்கு."

"இன்னாடா இது ஜீனி வேலை? டைவர் தண்ணி போட்டா காரு ஓடுதா? அட!"

"ஐயா! அந்த செய்தித்தாளை சற்றுத் தருகிறீர்களா?"

"இன்னா நய்னா... ஷோக்கா சட்டையெல்லாம் போட்னுகீறே? தமிள்ள பேசறே. பாஞ்சு பைசா கொடுத்து வாங்க்யேன்."

நான் அவன் சொல்வதில் நியாயமிருப்பதை உணர்ந்து, அந்தப் பத்திரிகையைக் காசு கொடுத்து வாங்கிப் பார்த்தேன். அதில்-

நாளை வெள்ளோட்டம்!

நீரில் ஓடும் சிற்றுந்து(கார்)!

பெட்ரோல் தேவையில்லை!

அந்தப் பத்திரிகை ஆபீஸில் உள்ள ஆச்சர்யக்குறிகள் அனைத்தையும் விரயமாக்கி, டாக்டர் ராகவானந்தத்தின் அதிசய கார் நாளை மக்கள் முன் பவனி வரப்போகும் செய்தி முன் பக்கம் முழுவதும் பரவி இருந்தது.

நான் உடனே டாக்டருக்கு டெலிபோன் செய்தேன்.

"பையா, எங்கே காணாமல் போய்விட்டாய் உடனே வா."

நான் பறந்து அங்கே சென்றபோது மாலதி ஸ்டார் டஸ்ட் படித்துக்கொண்டு இருந்தாள். என்னைப் பார்த்துவிட்டு மறுபடி படிப்பில் ஆழ்ந்தாள்.

"மால், டாக்டர் எங்கே?"

"ஷெட்" என்றாள், அதைவிடச் சுருக்கமான வார்த்தை கிடைக்காததால்.

"கார் ஓடுகிறதா?"

அவள் என்னைப் புரியாமல் பார்த்தாள்.

"கார்?"

"வாட்டர் கார்?"

"எனக்கு என்ன தெரியும்?"

"மாலதி, நாளைக்கு இனாகுரேஷன். பேப்பர் பார்க்கவில்லையா?"

"அப்படியா? சென்ற பதினைந்து நாட்களாக ஷெட்டில்தான் இருக்கிறார். அங்கேதான் சாப்பாடு, உப்புமா, காபி எல்லாம் போகிறது. உள்ளே என்ன செய்கிறார் என்பது எனக்குத் தெரியாது. எனக்கு இது மட்டும் தெரியும். நாளைக்கு இங்கே ரகளை, அடிதடி நடக்கப்போகிறது; நான் மாடியிலிருந்து பார்த்துக்கொண்டு இருப்பேன். இதோ அப்பா."

டாக்டர் அவர்கள் ஈஸ்ட்மென் கலரில் நடந்து வந்தார். உடம்பில் பச்சை பெயின்ட். காது நுனியில் மூக்குக் கண்ணாடியில் இடது செருப்பில் சிவப்பு பெயின்ட். உடம்பின் மற்ற சிற்சில இடங்களில் அங்கங்கே மஞ்சள் நிறம். இப்படி. கையில் ஒரு ஃப்ளிட் டின்.

"வந்துவிட்டாயா. மாலதி, பிரெஸ் கான்ஃபரன்சுக்குப் பிரம்பு நாற்காலிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும். சுவரில் நம்பர் எழுதியிருக்கிறேன். போன் பண்ணிவிடு."

"டாக்டர், கார் ஓடுகிறதா?"

"ஓடும்... ஓடும். ஃபினிஷிங் டச்சஸ் கொடுத்துக்கொண்டு இருக்கிறேன். ஸ்ப்ரே பெயின்ட் அடித்துக்கொண்டு இருக்கிறேன். பையா, மாலதி கடைசியில் காலை வாரி விட்டுவிட்டாள். மாட்டேன் என்கிறாள்."

"மாட்டேன், மாட்டேன், மாட்டேன்" என்றாள் மாலதி.

"என்ன மாட்டாய்?"

"நான் அந்த காரை நாளை ஓட்ட வேண்டுமாம். செத்தாலும் மாட்டேன். நீ அதைப் பார்த்தாயோ? அது கார் போலவே இல்லை. ஒட்டகம் போல் இருக்கிறது. அதில் நான் உட்கார்ந்து அதுவும் பத்திரிகைக்காரர்களின் முன்னிலையில்... சே."

"ஒரு பெண் அதை ஓட்டினால் க்ளாமர் இருக்கும்."

"டாக்டர், அது ஓடுமா?"

"ஓடாது" என்றாள் மாலதி.

"ஓடும்" என்றார் டாக்டர். "நான் ஜாக் பண்ணி உயர்த்தி முந்நூறு மைல் ஓட்டிப் பார்த்தேன். பையா நான் உன்னைக் கூப்பிட்டதன் காரணம் அதுதான். நீதான்

நாளைக்குப் பத்திரிகைக்காரர்கள் முன் என் காரை ஓட்டப்போகிறாய். இளம் சமுதாயத்தின் கார் இது. இளம் சமுதாயம்தான் ஓட்ட வேண்டும்..."

"நானா?"

"நீதான். சரித்திரம் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறது."

"டாக்டர், எனக்கு டிரைவிங் லைசென்ஸ் இல்லை என்பது சரித்திரத்துக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை."

"மேலும், இவருக்கு ஈயைத் தவிர வேறு எதையும் ஓட்டத் தெரியாது என்பதும் சரித்திரத்துக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை."

"டாக்டர், நான் நாளைக்கு திருவான்மியூர் வரைக்கும் பொடிநடையாகப் போய்விட்டு வர வேண்டும். ஒரு வேண்டுதல்."

"அப்பா, கழல்கிறார் பாருங்கள். கோழை. புறமுதுகு காட்டும் இழிதகை."

எனக்கு ரோசம் வந்துவிட்டது. "டாக்டர், ஆல்ரைட். உங்கள் காரை நான் ஓட்டத் தயார். மாலதி, கட்டுண்டோம். காத்திருப்போம். நாங்கள் சிரிக்கும் காலம் வரும். டாக்டர், நான் காரைப் பார்க்க வேண்டும்."

"ஷி இஸ் எ ப்யூட்டி. வா, காட்டுகிறேன்" என்றார்.

ஷெட் கதவைத் திறந்ததும் என் மூஞ்சியில் அறைந்தது போல பளிச் என்று அந்த கார் தெரிந்தது. அதை கார் என்று அறுதியிட்டுச் சொல்வது கார்களின் வளர்ச்சிக்கு ஆக்கமளித்திட்ட சான்றோர்களைப் புறக்கணிப்பதாகும். கார் போலவும்இருந்தது. கார் இல்லை போலவும் இருந்தது. நல்ல உயரம். வாளிப்பான உடம்பு. அதன் மாடியில் ஒரு செப்டிக் டேங்க் அளவுக்குப் பெரிய டேங்க் ஒன்று இருந்தது. அதிலிருந்து பதினெட்டு டிகிரி சாய்வில் ஒரு குழாய் சரிந்தது. மற்றொரு டேங்க்.

"மேலே இருப்பது மெயின் டேங்க். கீழே ஆக்ஸிலரி டெயில் ரேஸ் டேங்க். இதுதான் பட்டர்ஃப்ளை வால்வ் கன்ட்ரோல். அதை இழுத்தால் வேகம் அதிகமாகும். விட்டால் குறையும். அது பிரேக். இது ஸ்டியரிங். அவ்வளவுதான். எப்படி இருக்கிறாள் பார்ப்பதற்கு?"

"ஓ, ஓ. நன்றாகத்தான் இருக்கிறாள். ஸீட் கொஞ்சம் உயரமாக இருக்கிறது."

"படி இன்னும் வைக்கவில்லை. இந்த டிரம் மீது ஏறி ஸீட்டில் உட்கார்ந்துகொள்ள வேண்டும். தச்சனிடம் படிச்சுச் சொல்லியிருந்தேன். அவன் கொடுத்த காசைக் குடித்துவிட்டு, நாளைக்கு என்று சொல்லிவிட்டான். பரவாயில்லை. ஏறிப் பார்."

"டாக்டர், நாளை காலை பார்த்துக்கொள்ளலாமே."

"பயப்படாதே. ஏறி உட்கார்ந்து பார்."

நான் ஃபைட்டர் விமானத்தை எட்டி வேடிக்கை பார்க்க ஏறும் மந்திரி போல் அந்த டிரம் மீது கால் வைத்து காரினுள் ஏறிக்கொண்டேன்.

டாக்டர் டிரம்மை அந்தப் பக்கம் உருட்டிச் சென்று அதன் மேல் ஏறி, என் அருகே உள்ள ஸீட்டில் ஏறிக்கொண்டார்.

ஏறும்போது, 'கீச் கீச்' என்ற சத்தமும் அதன் பின் 'க்ளங்' என்று நிறைந்த கங்காளம் அசைவது போல் சத்தமும் கேட்டது. தவிர, டாக்டரின் மாடியிலிருந்து ஒரு திவலைத் தண்ணீர் வழிந்து என் பேன்ட்டை தொடை பாகத்தில் நனைத்தது."

"ஃபுல் டேங்க், நூறு மைல் ஓடும்" என்று கண் சிமிட்டினார் டாக்டர்.

"மர ஸீட். இன்னும் மெத்தை தைக்கவில்லை போலும்" என்றேன்.

"யூஃபோமுக்கு ஆர்டர் கொடுத்திருக்கிறேன்."

ஸ்டீரியங் மேல் கைவைத்துக்கொண்டேன். மாலுமி போல் உணர்ந்தேன். அது என்ன?"

"அது கன்ட்ரோல் சுவிட்ச்."

அது ஊ ஊ உ என்றது கார். "ஓ யெஸ். இது ஹாரன்."

மாலதி ஓரத்தில் கீழே நின்றுகொண்டு இருந்தாள்.

"அங்கிருந்து உங்களைப் பார்த்தால் முல்லைக்குத் தேர் ஈவதற்கு முன்பான பாரி போல இருக்கிறீர்கள்."

நான் அவளை மதிக்கவில்லை. உலகம் எப்போதும் முதலில் சிரிக்கத்தான் செய்யும்."

"டாக்டர், இது என்ன குமிழ்?"

அதுதான் த்ராட்டில் கன்ட்ரோல்... ஏய், ஏய், இழுக்காதே. இழுக்காதே!"

இழுத்தாகிவிட்டது!

அந்த சரித்திரப் பிரசித்தமான பயணம் அப்போதுதான் துவங்கியது.

இழுக்காதே என்று சொன்ன குமிழை இழுத்ததால் ஜோ என்று அந்தரங்கத்தில் (கடைசியாக நான் குற்றாலத்தில் கேட்ட ) சத்தம் கேட்டது.

டாக்டரின் கார் பெல்டன் வீல் தத்துவத்தில் அமைந்தது. வால்வைத் திறந்தால் மேலே நிரம்பி இருக்கும் தண்ணீர் திறக்கப்பட்டுக் குழாய் வழியாக மிக வேகமாகச் சரிந்து, கீழ் டேங்குக்கு ஓடும். போகிற போக்கில் டர்பைன் சக்கரத்தைச் சுற்றிவிட்டு ஓடும். டர்பைனுடன் இணைக்கப்பட்ட காரின் சக்கரங்கள் சுழல, கார் ஓடும்.

திறந்துவிட்டேன் போலிருக்கிறது, கார் ஒரு முறை சோம்பல் முறித்துக்கொண்டு குலுங்கி நகர ஆரம்பித்தது.

"டாக்டர், நகர்கிறது. எனக்கு ஓட்டத் தெரியாது."

"பையா, உடனே எழுந்திரு. ஸீட் மாற்றிக்கொள்ளலாம். என்னால் சமாளிக்க முடியும்."

நான் எழுந்திருக்க முயன்றேன். முடியவில்லை.

"டாக்டர், என் பேன்ட் ஸீட்டில் ஒட்டிக்கொண்டுவிட்டது."

"பெயின்ட் ஈரமாக இருந்திருக்கிறது. பையா, க்விக். பேன்ட்டைக் கழற்றிவிட்டு எழுந்திரு."

"டாக்டர், டாக்டர் லுக் அவுட்."

கார் ஷெட்டுக்கு வெளியே வந்து நேராக 'சிறு குடும்பம் போதுமே' சுவரை நோக்கிச் சென்று கொண்டு இருந்தது.

"பையா, ஸ்டீயரிங்கைத் திருப்பு."

"டைட்டாக இருக்கிறது டாக்டர்."

"பயப்படாதே, நான் இருக்கிறேன். அந்த பிரேக்கை லேசாக அழுத்து. ஸ்மூத்தாகப் போகும். பிரேக்கை அழுத்திப் பார்."

"டாக்டர், பிரேக் தொளதொளவென்று இருக்கிறது."

"ஓ, மறந்துவிட்டேன். ஒரு கனெக்டிங் ராடை இன்னும் இணைக்கவில்லை."

"டாக்டர், ஏதாவது செய்யுங்கள். கார் ஓடிக்கொண்டு இருக்கிறது..."

"அதானே, த்ராட்டிலை மூடிவிட்டேன். வால்வை மூடிவிட்டேன். இன்னும் ஓடிக்கொண்டு இருக்கிறதே, இது ஓடக் கூடாது."

"டாக்டர், இறங்கிவிடலாமே. நல்ல சரிவு. வேகம் அதிகமாகிக்கொண்டு வருகிறது."

"பையா, யூர் எ ஜீனியஸ். அதானே? ஏன் ஓடுகிறது என்று இப்போது தெரிந்துவிட்டது. சரிவு, அதனால்தான் ஓடுகிறது. ஏனென்றால் தண்ணீரை நான் அப்போதே நிறுத்தியாகிவிட்டது."

என் கணுக்கால் வரை தண்ணீர் ஏறி நனைத்திருந்தது.

நாயர் கடை நோக்கி நாங்கள் விரைந்துகொண்டு இருந்தோம். அந்த முச்சந்தியில் ரோடு இடம் வலமாகப் பிரிகிறது. அந்த மெயின் ரோட்டில் பஸ்களும் லாரிகளும் உற்சாகமாகச் சென்றுகொண்டு இருந்தன. ஒரு போலீஸ்காரர் டியூட்டி ஏற்றுக்கொள்ளலாமா என்கிற உத்தேசத்தில் எதிரே நாயர் கடையில் பன் கடித்துக்கொண்டு இருக்க... எங்கள் ஊர்வலம் வருவதைப் பார்த்து கலவரப்பட்டு, அங்கிருந்தே 'ஸ்டாப்' அடையாளம் காட்டினார்.

ஸ்டாப்பாவது, அடையாளமாவது! எங்கள் காரை நிற்க வைப்பது யார்?

போலீஸ்காரர் தன் ஆணைக்குப் படியாமல் தன்னையே நோக்கி எங்கள் கார் வருவதை உணர்ந்து, பன்னைக் கீழே போட்டுவிட்டு விசில் ஊதித் தள்ளினார். நாங்கள் அந்த முச்சந்தியை அடைய கார்கள் 'கிறீச் கிறீச்' என்று பிரேக் போட்டுச் சமாளித்து நிற்க... ஏதோ ஒரு பூர்வ ஜென்ம ஞாபகம் போல் கார் அந்த நாயர் கடையை ஏகாக்கிரச் சிந்தையுடன் அடைந்து, ஒரு பாய்லரை வென்று, ஓரிரண்டு பெஞ்சுகளை உருட்டிவிட்டு, நான்கைந்து டீ குடிப்பவர்களை கையில் செருப்பை எடுத்துக்கொண்டு ஓடவைத்து, கடையின் தற்காலிகச் சுவரை உடைத்து, பின் கட்டில் ஒரு சிறிய அறையில் ஒரு பெண்ணுக்குப் பாட்டு சொல்லிக்கொண்டு இருந்தவரை வாரிச் சுருட்டிக்கொண்டு ஆர்மோனியத்துடன் ஓடவைத்து... மரத்தூண் ஒன்றின் மேல் மோதி...

அதற்கப்புறம் என் நினைவுகள் அவ்வளவு தெளிவாக இல்லை. என்னைச் சுற்றி நீர் சூழ்ந்துகொள்ள... யாரோ, "என்ன அக்கிரமம், தண்ணி லாரியை வீட்டுக்குள்ளேயே ஓட்டறாங்களே படுபாவி" என்று புகார் செய்வது கேட்க... என் மூக்கு, நெற்றிப் புருவம், தலை மயிர் என்று தண்ணீர் ஏற... நான் உள்ளே உள்ளே உள்ளே...

## அயோத்யா மண்டபம் - சுஜாதா

கிருஷ்ணமூர்த்தி குரலில் உற்சாகம் பொங்க போன் செய்தான், ‘‘கண்ணே கலைச்செல்வி, பாஸ்போர்ட், ஏர்டிக்கெட் எல்லாம் தயார். வெள்ளிக்கிழமை சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் ப்ளைட்டில ஷய்க்! சிங்கப்பூர் நாரிட்டா சான்ஃப்ரான்சிஸ்கோ ஆண்டர்சன் ஏர்போர்ட்டுக்கு வந்துருவான், எல்லாம் பேக் பண்ணிட்டயோல்லியோ?’’

‘ ‘இன்னும் திணிச்சுகிட்டே இருக்கேன்’ ’ என்றாள் கலை.

‘ ‘நாசமாப் போச்சு, ஒரு மாசமாத் திணிச்சுண்டிருக்கே, இன்னும் முடியலையா?

‘ ‘ஒரு மாசமா கணவன் போத்திகிட்டு படுத்துக்கிட்டிருந்தா?’’

‘ ‘ரெண்டு நாள்தான் இருக்கு. மாம்பலத்துக்குப் போய்த் தலையைக் காட்டிட்டு வந்துர்றேன்’ ’ .

‘ ‘நானு?’’

கிருஷ்ணமூர்த்தி தயங்கினான். ‘‘ம்.. நீ வேண்டாம். கலை··· இப்ப வேண்டாம். அப்பாக்கு இன்னும் சமாதானமாகல்லை.’’

அவள் குரல் உயர்ந்தது. ‘‘எப்ப சமாதானமாவார், எனக்கு அறுபது வயசாகணுமா?’’

‘ ‘சே சே குழந்தை பெத்துகிட்டப்புறம்.’’

‘ ‘நான்சென்ஸ். நான் என்ன வேற்று கிரகத்து மனுசியா?’’

‘ ‘பாரு, சந்தோஷ சமயத்தில் இந்த டாபிக் வேண்டாமே’ ’

‘ ‘நாம யு எஸ் போவுறது உங்கப்பாருக்குத் தெரியுமில்ல?’’

‘ ‘இன்னும் சொல்லலை’ ’

‘ ‘பாரு கிருஷ், சரியாகக் காதில வாங்கிக்க உங்கப்பாவைச் சந்திக்காமப் புறப்படறது எனக்குப் பிடிக்கலை. டாமிட். மாமனாரைப் போய்ப் பாத்தா என்ன? கடிச்சுருவாரா? நான் என்ன பாவம் செய்தேன்?’’

‘ ‘அப்படி இல்லை கலை, மைகாட்··· நான் இதை எப்படி··· ஆல்ரைட் சரி முதல்ல நான் போய்ப் பூர்வாங்க வேலைகளைக் கவனிக்கறேன். புறப்படறதுக்கு முன்னாடி பார்க்கணும்கறான்னு சொல்லிப் பார்க்கறேன். சரி கூட்டிண்டு வான்னா···’ ’

‘ ‘அந்த அளவுக்கு என்னை வெறுக்க காரணம் என்ன?’’ என்று கண்ணீரை ஒத்திக் கொண்டாள்.

‘ ‘உனக்குப் புரியாதும்மா, அவங்களுக்கு என்னால எவ்வளவோ மனத்தாங்கல்··· ஏமாத்தம்’ ’ .

‘ ‘என்னை அவங்க பாத்தது கூட இல்லையே.’’

‘ ‘அம்மாகிட்ட போட்டோ காட்டிருக்கேன்’ ’ .

‘ ‘அது போதாது’ ’

‘ ‘சரி சரி சரி கத்தாதே’ ’

‘ ‘பாரு கிருஷ், முதல்ல உனக்குத் தைரியம் வேணும். உங்கப்பாம்மாவைச் சந்திக்காம நான் அமெரிக்கா வரமாட்டேன். நாம செஞ்சுகிட்டது என்னவோ சொல்வாங்களே ‘காந்தர்வ விவாஹம்’ இல்லை ரிஜிஸ்ட்ரார் முன்னால நண்பர்கள், பெரியமனுசங்க சாட்சியோட ...’’

‘ ‘ஆல்ரைட், வெள்ளிக்கிழமைக்குள்ள கூட்டிண்டு போறேன்’ ’ .

‘ ‘ஏர்ப்போர்ட் போறதுக்கு முன்னே அஞ்சு நிமிஷமா.’’

‘ ‘ஹய்யோ கூட்டிண்டு போறேங்கறேனே’ ’ என்றான் அதட்டலாக. இப்ப ஒரு கிஸ் குடு, என்று அவளை அணைத்துக்கொள்ள முற்பட்டவனைத் தள்ளினாள்.

மேற்கு மாம்பலத்தில் இரண்டு பல மாடி நடுத்தரக் குடியிருப்புகளின் மத்தியில் அபத்திரமாக வாழ்ந்து கொண்டிருந்தது அந்த ஓட்டு வீடு, அப்பா வாசலில் தொடையில் திரித்து தகளி நூற்றுக் கொண்டிருந்தார். முன்பு பார்த்ததற்கு மெலிந்திருந்தார். முகத்தில் ஒரு வார தாடி, குடுமி.

அவனை மேலும் கீழும் பார்த்து நூற்பதைத் தொடர்ந்தார். ‘‘பார்வதி உன் பிள்ளை வந்திருக்கான். நான் கடைக்குப் போறேன்’ ’ என்று எழுந்தார்.

‘ ‘கொஞ்சம் இருப்பா உன்னோடதான் பேசணும்.’’

அவர் அவனை அடிபட்ட பார்வையுடன் பார்த்தார்.

‘ ‘எங்கிட்ட பேச என்ன இருக்கு. எல்லாம் சந்தி சிரிக்க பேசியாச்சே’ ’

‘ ‘நான் பேசவந்தது சந்தோஷமான விஷயம்பா.’’

‘ ‘உங்கிட்ட எனக்கு பேச ஏதும் இல்லை, கிச்சா. நீ எங்களுக்குத் துரோகம் பண்ணிட்ட. முதுகில குத்திட்ட. அதை முதல்ல ஒத்துக்கோ’ ’ .

‘ ‘சரிப்பா சரி. நாங்க ரெண்டு பேரும் வர வெள்ளிக்கிழமை அமெரிக்கா போறோம்’ ’ .

‘ ‘தாராளமா போ, லோகத்தையே ஜெயிச்சுட்டு வா.’’

‘ ‘போறதுக்கு முன்னால கலைச்செல்வி உங்க ரெண்டு பேரையும் சந்திக்கணும்ங்கறா’ ’ .

‘ ‘கலைச் செல்விங்கறது…?’’

‘ ‘விளையாடாதப்பா, என் அகமுடையாள் கலைச்செல்வி’ ’ .

‘ ‘ஓ… உனக்கு கல்யாணம் ஆயுடுத்தா.’’

‘ ‘ஏம்பா இப்படி படுத்தறே. எத்தனை நாளைக்குப்பா கோபம்? நான் என்ன செய்யணும்னு விரும்பற? வீடு வீடா போய் அமாவாசை தர்ப்பணம் பண்ணி வெக்கணும்னா.. மண்டபத்தில உக்காந்துண்டு ருத்ரம் சமகம்னு…’ ’ இதற்குள் அம்மா வந்து அவனைக் காப்பாற்றி உள்ளே அழைத்துச் சென்றாள்.

‘ ‘அவருக்கு இன்னும் கோபம் ஆறலை. ரொம்ப அவமானப்பட்டு போய்ட்டோம். அந்தப் பொண்ணு மேல எங்களுக்கு எந்த விரோதமும் இல்லை கிச்சு. நடராஜையருக்கு வாக்குக் கொடுத்து தவறிட்டோம். பந்தக்கால் நட்டாச்சு. கல்யாண மண்டபம் புக் பண்ணி திருமாங்கல்யம் பண்ணியாச்சு. நாயனக்காராளுக்கு சொல்லியாச்சு.’’

‘ ‘தெரியும்மா, தெரியும்மா “அதனால பவித்ராவுக்கு கல்யாணம் ஆகாம போச்சா சொல்லு’ ’ .

‘ ‘கொத்திண்டு போயாச்சு. என்ன அழகு, என்ன படிப்பு, நமக்குத்தான் கொடுத்து வெக்கலை. என்ன காதல் கன்றாவியோ, உன் ஆம்டையா கருப்பா சேப்பான்னு கூட தெரியாது. அந்த அழகு இருப்பாளாடா?’’

‘ ‘போட்டோ காட்டினேனம்மா’ .

‘ ‘பாத்தேன். கொஞ்சம் பூசினா மாதிரி உனக்கு அக்கா மாதிரி இருக்கா’ ’ .

‘ ‘அம்மா!’’ என்று அதட்டலாகத் தாயைப் பார்த்தான்

‘ ‘ரெண்டு பேருக்கும் அமெரிக்காவில் ஒரு பெரிய அசைன்மெண்ட் கிடைச்சிருக்கு. போறதுக்கு முந்தி நீதான் அப்பாவைச் சமாதானப்படுத்தி வெக்கணும் நாளைக்கு.’’

‘ ‘வா இப்பவே கேட்டுரலாம்’ ’ .

திண்ணைக்குத் திரும்ப வந்தபோது அப்பா, “எங்க என் பனியன்’ ’ என்று கேட்டார். “இருக்கியா சாப்பிட்டுட்டுப் போ?’’

அம்மா அழுத்தமாகவே சொன்னாள். “போனாப் போறதுன்னா… அவளை வரச் சொல்லலாமே. கல்யாணமோ ஆய்டுத்து, பெரியவாதான் தாழ்ந்து போக வேண்டியிருக்கு’ ’ .

‘ ‘இப்ப என்ன சொல்றே? பாக்க மாட்டேன்னு சொன்னா வத்தக்கொழம்பு பண்ணமாட்டியா?’’

‘ ‘அந்தப் பொண்ணு உங்ககிட்ட வந்து ஆசீர்வாதம் வாங்கிக்கணுமாம்.’’

‘ ‘என்ன விசேஷம்?’’

‘ ‘சொன்னேனேப்பா, ரெண்டு பேரும் அமெரிக்கா போறம். குறைந்த பட்சம் ரெண்டு வருஷத்துக்கு பாக்க முடியாது.’’

‘ ‘அதுவரைக்கும் இருக்கமாட்டேன்னு சந்தேகமா?’’

‘ ‘என்ன பேச்சு இதெல்லாம்?’’

அப்பா நூற்ற நூலை சீராக பூணூல் பிரியாகப் பண்ணி, பிரம்ம முடிச்சுப் போட்டு, மஞ்சள் தொட்டு லாகவ விரல்களால் ஒரு பரத நாட்டிய முத்திரைபோலத் திருப்பி எட்டு வடிவில் சுற்றிச் சுற்றி விரல்களின் ஊடே சேகரித்தார். மௌனமாக காத்திருந்தான். அவர் நெற்றியில் யோசனை ஓடியது.

' 'சரி! அமாவாசை வருது. நான் கடைல இருப்பேன். அங்க வந்து பாக்க சொல்லு. அந்த பொண்ணை நான் பாக்கணும், அவ்வளவுதானே?''

' 'பாத்து பேசணும்ப்பா. ரொம்ப நல்ல பொண்ணு' '

கிருஷ்ணமூர்த்தி பேருவகையில் உடனே கலைச் செல்விக்கு செல்லடித்தான்.

' 'கலைக்குட்டி குட் நியூஸ். நீ உடனே அயோத்தியா மண்டபம் வரே' ' .

'அயோக்கியா மண்டபமா? அது எங்கருக்கு' '

' 'அயோத்யா... அயோத்யா ராமர் பிறந்த ஊர்' '

' 'மாம்பலத்திலயா பொறந்தாரு' ' .

' 'கட் தி காமெடி! நீ என்ன பண்றே, மேற்கு மாம்பலத்தில அயோத்தியா மண்டபம்னு இருக்கு. ஆட்டோகாரன்கிட்ட கேட்டா சொல்வான். அங்க வந்துரு' ' .

' 'உங்கப்பா அந்த மண்டபத்திலயா குடியிருக்கார்?''

' 'இல்லைடி, அவர் கடை எதுத்தாப்பல இருக்கு.''

' 'என்ன கடை?''

' 'நீ வந்து பாரேன்' ' என்றான்.

' 'அப்பா, இதான் கலைச் செல்வி' ' .

அவர் ஒரு முறை நிமிர்ந்து அவளைப் பார்த்துவிட்டு, வேறு யாரையோ "வாங்கோ, சவுண்டிகரணம் சுபஸ்வீகாரம் ஆச்சா?'' என்றார். கலைச்செல்வி அந்தக் 'கடையை' வினோதமாகப் பார்த்தாள். நாமக்கட்டி, விபூதிப் பொட்டலம், குங்குமம், ஓலைப்பெட்டி, தோத்திரபுத்தகங்கள், திருப்பதி பெருமாள் படம் பல சைஸ்களில், சல்லிசு மர வேலைப்பாடுள்ள பெட்டிகள், உருத்திராட்ச மாலைகள், இச்சிலி பிச்சிலி சாமான்கள். மொத்தம் அந்தக் கடையில் ஐம்பது ரூபாய்க்குத்தான் பொருள் இருக்கும் போலத் தோன்றியது.

' 'அய்யா, நானும் உங்க மகனும் ஐ.ஐ.டி.யில ஒண்ணா படிச்சோம். ஒண்ணா ஒரே கம்பெனியில வேலை பாக்கறோம். கிருஷ் ஒரு ஜெம். ரொம்ப நல்லா வளத்திருக்கீங்க' ' .

' 'ராங் ஓப்பனிங், பார்ட்னர்' ' என்று முணுமுணுத்தான்.

' 'ம் வளத்தது யாரு' ' என்று ஏளனமாகப் பார்த்தார்.

' 'ரெண்டு பேருக்கும் ஒரு ப்ராஜெக்ட் விஷயமாக அமெரிக்கா போற சான்ஸ் கெடைச்சிருக்கு' ' .

' 'எல்லாம் சொன்னான் தாராளமா போய்ட்டு வாங்கோ' ' .

' 'அய்யா, இது என்ன கடை?'

' 'பூணூல், தர்ப்பை சமாசாரங்கள். பிராமின்ஸுக்கு ஏகப்பட்ட கடமைகள், சம்பிரதாயங்கள் இருக்கும்மா. தாயார், தோப்பனார் சொல்றதை கேக்கணும் முதல்ல. அதெல்லாம் யார் இப்ப பாக்கறா. வில்வ இலை, தர்ப்பை பூணூல் மாத்தறது மாசியம் சோதம்பம்னு சடங்குகள் மட்டும் பாக்கியிருக்கு.''

' 'இதெல்லாம் சாமி சமாசாரம்ங்களா?''

‘ ‘சாமி மட்டும் இல்லை பித்ருக்களை அப்பப்ப கூப்ட்டு சிரார்த்தம் பிண்டாதானம் செய்ய வெக்கறது. இது எங்க பேமிலியோட பரம்பரைத் தொழில். இது என்னோட நின்னு போகட்டும். இவனை இவம்மா திருமாங்கல்யத்தைக் கூட வித்து. படிக்க வெச்சோம்.’’

‘ ‘எங்கப்பா உழவு மாட்டை வித்தாருங்க’ ’ .

‘ ‘ஏம்மா அம்மாப்பா வச்சபேரே அது என்னது… கலைச்செல்விதானா இல்லை பணங்கட்டி மாத்திண்டதா?’’

‘ ‘இல்லங்க.. ஒரு பேர்தான் கலைச்செல்வி’ ’

‘ ‘உங்கம்மா பேரு’ ’ .

‘ ‘தமிழ்ச்செல்வி’ ’ .

‘ ‘அம்பாள் பேரா ஏதும் இல்லையா’ ’ .

‘ ‘கலைச்செல்வின்னா சரஸ்வதிப்பா’ ’ .

‘ ‘நீங்கள்ளாம் என்ன ஜாதி?’’

‘ ‘போச்சுரா!’’ என்று கிருஷ்ணமூர்த்தி’ “அப்பா அது வந்து, எனக்கே அது தெரியாது’ ’ என்று குறுக்கிட்டுப் பார்த்தான்.

‘ ‘இர்றா’ ’ .

‘ ‘க்ருஷ், பெரியவர் கேக்கட்டும். நான் சொல்றன். அய்யா. நாங்க வந்து பிற்பட்டவங்க’ ’ .

‘ ‘பிற்பட்டவங்கன்னா என்ன ஜாதி?’’

அவள் சொல்வதற்குள் ஒரு ஆட்டோ வந்து நின்றது. அதில் முன் சீட்டில் இருவர், பின் சீட்டில் மூவர் என்று ஐந்து பேர் பளபளவென்று உருட்டுக்கட்டைகளுடன் இறங்கி வந்து ‘மடேர் மடேர்’ என்று அப்பாவின் மண்டையிலும் தோளிலும் தாக்கினர். ஒருவன் கத்தியால் விலாவில் தாக்க, கலைச் செல்வி குறுக்கிட்டாள். “த்தா சாவுங்கடா’ ’ என்று கடையில் இருந்த அனைத்தையும் கவிழ்த்து விட்டு பெட்ரோல் குண்டு வீசி விட்டு இன்ஜின் ஓடிக் கொண்டிருந்த ஆட்டோவில் மீண்டும் பாய்ந்து ஏறிச் சென்றனர். புரியாத வாழ்க கோஷம் காற்றில் கரைய, கலைச்செல்வியின் கரங்களில் அப்பாவின் ரத்தம் பிசுபிசுத்தது.

ட்ராவல் ஏஜெண்டிடம் சொல்லி பிரயாண ஏற்பாடுகளை தள்ளி வைத்து விட்டு டிக்கெட்டுகளை ரீ புக்கிங் செய்யச் சொல்லிவிட்டு கிருஷ்ணமூர்த்தி பி.ஆர். ஆஸ்பத்திரிக்கு வந்தான். ஒன்பதாவது அறையில் கலைச்செல்வி அப்பாவின் கையைப் பிடித்துக் கொண்டு ஸ்பூனில் ஆர்லிக்ஸ் புகட்டிக் கொண்டிருந்தாள். அவர் தோளிலும் தலையிலும் கட்டுப்போட்டிருந்தது. ஒரு கண் இடுங்கியிருந்தது. உதடு தடித்திருந்தது.

‘ ‘நல்ல வேளை தப்பிச்சிங்கப்பா’ ’ .

‘ ‘எதுக்கு என்னை அடிச்சா? எதுக்கு கடையை எரிச்சா? நான் யாருக்கும் துரோகம் பண்ணலையே’ ’ என்றார் மெலிய குரலில்.

‘ ‘சில கேள்விகளுக்கு விடையே கிடையாதுப்பா’ ’ .

‘ ‘நல்ல வேளை நீங்க ரெண்டுபேரும் தப்பிச்சது தெய்வாதினம்தாம்மா. அமெரிக்கா போற சமயத்தில ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆகலை! அவங்களை புடிச்சட்டாளாமே’ ’

‘ ‘வேற யாரையோ ரௌடி ஷீட்டரை அரஸ்ட் பண்ணி வச்சுட்டு என்னை அடையாளம் காட்டச் சொன்னாப்பா. எல்லாம் கண்துடைப்பு!’’

நர்ஸ் வந்து, "க்ளுக்கோஸ் கொண்டு வந்ததா?'' என்று கேட்டாள். கிருஷ்ணமூர்த்தி க்ளுகோஸ் பாட்டில்களைக் கொடுத்தான்.

' 'டயபடிஸ், பிபி எதும் இல்லைப்பா உனக்கு. ஒரு வாரத்தில் டிஸ்சார்ஜ் பண்ணிடுவாப்பா '' .

' 'அமெரிக்கா போகலையா?''

' 'ஒரு வாரம் போஸ்ட்போன்பண்ணிட்டோம்பா' ' என்றாள் கலை. அவர் தலையைத் தடவிக் கொடுத்து உதட்டில் எச்சிலைத் துடைத்துவிட்டாள். "எவ்வளவு தலைமயிர்ப்பா உங்களுக்கு! கிருஷ், சீப்பு கொண்டு வரச்சொன்னனே?''

' 'கலை! அவன் போகட்டும். நீ இரேம்மா. எங்க கூட இரேன்.''

கலைச் செல்வி கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்தாள். அவன் சிரித்து, "இல்லைப்பா இவதான் சிஸ்டம் ப்ரொக்ராமர். நான் ஆர்கிடெக்ட். ரெண்டு பேரும் போகணும்.''

' 'சரி நல்லபடியா போய்ட்டு வாங்கோ. அது என்ன எடம்?''

' 'ஸான் ஹோஸே, சாக்ரமெண்ட்டோன்னு ரெண்டு எடத்தில், கலிஃபோர்னியாலப்பா' ' .

' 'அங்க அம்மாவாசை தர்ப்பணம் பண்ணி வெக்கறவா யாராவது நம்மவா இருக்காளா? விஜாரி, தர்ப்பையைத் தூக்கிண்டு வந்துர்றேன். என்னால இனிமே அடி தாங்கமுடியாது' ' என்றார்.

கலைச்செல்வியின் கண்ணீர் அவர் மணிக்கட்டில் உருண்டது.

## ஓலைப்பட்டாசு - சுஜாதா

அந்த தீபாவளி, என் வாழ்க்கையில் மறக்க முடியாதது. அதைப் பற்றி சொல்வதற்குள் தேவைப்பட்ட அளவுக்கு மட்டும் சுயபுராணம். என் பெயர் எதற்கு? நான். அவ்வளவுதான். மற்றவர் பெயர்கள் முக்கியம். அது சந்தானம் ஐயங்கார், பெருந்தேவி, சின்னா இவர்களின் பெயர்கள் இந்த கதைக்கு என்னிலிருந்து அவர்களை அந்நியப்படுத்துவதற்கு முக்கியம்.

பார்த்தீர்களா… ஆரம்பித்த விஷயத்தை விட்டு அலைகிறேனே. காரணம் – என் வயசு இன்றைக்கு எழுபது. பார்த்த மரணங்கள் ஆறு. இரண்டு மனைவிகள். ஒரு தேசிய விருது. ஒரு நாள் ஜெயில். ஒரு ப்ராஸ்டேட் ஆபரேஷன். கராஜில் நெருக்கமாக மூன்று கார்கள். உறவினரின் துரோகங்கள். தென் ஆப்பிரிக்கா டர்பனில் இரண்டு வருஷம் இவ்வாறு அதிகம் சேதப்படாமல் எழுபதை அடைந்து விட்ட ஒருவன் இறந்துபோனால் ஹிந்துவில் எட்டாம் பக்கத்தில் நான்கு வரிகளில் எழுபது வருஷமும் அடங்கி போகும்.

சொல்ல வந்தது, அந்த ஒரு தீபாவளி பற்றி. சீரங்கத்தில் என் பன்னிரண்டாவது வயதில் என் பாட்டியின் கண்காணிப்பில் வாழ்ந்தேன். அதனால் கொஞ்சம் பணத்தட்டுப்பாடு. அந்த தீபாவளிக்கு பட்டாசு வாங்க மொத்தம் ஐந்து ரூபாய்தான் தந்தாள். இப்போது என் விட்டில ஐந்து ரூபாய் தாளை, தரையில் விழுந்தால் வேலைக்காரர்கள் கூட பொறுக்கமாட்டார்கள். அப்போது குறைவான பொருளாதாரத்தில் ஐந்து ரூபாயில் அதிகப்படியாக சந்தோஷம் கிடைக்க… கொள்ளிடக் கரையருகில் ஓலைப்பட்டாசு சல்லிசாக விற்பார்கள்.

பனையோலையில் சின்னதாக வெடிமருந்தை வைத்து முடிச்சுப் போட்டு மிகச் சின்னதாக திரியுடன், பனையோலை வாலுடன் பிரமாதமாக வெடிக்கும். ஆனால், ரொம்ப உஷாராக இருக்க வேண்டும். பற்ற வைப்பதற்குள்ளே வெடித்து கையை உதறவேண்டி வரும். மேலும் ஒரு வாரம் வெயிலில் காயப்போட்டே ஆகவேண்டும். பாட்டி கொடுக்கும் காசில் ஓலைப்பட்டாசு பாதப் பணத்துக்கு வாங்கிக்கொண்டு, மிச்சத்தில் கொல்லன் பட்டறைக்கு போய் ஒரு வேட்டுக் குழாயும் கந்தகப் பொடியும் வாங்கிக் கொண்டேன்.

இது ஒரு மாதிரி மினி வேட்டுக்குழாய். நீண்ட கம்பியின் இறுதியில் ஒரு குழலும் போல்ட்டும் இருக்கும். குழலில் மஞ்சளான கந்தகத்தை கெட்டித்து அதனுள் போல்ட்டை செருகி சுவரில் மடேர் என்று ஒரு அறை அறைந்தால் கேட்கும் வெடிச் சத்தம், நம் காதில் விண்ண்ண்ண் என்று அலறும். வெடியை விட திண்ணையில் சுதேசமித்திரன் படித்து கொண்டிருக்கும் தாத்தாக்களின் பின்பக்கம் மெள்ள நழுவி, ஒரு டமால் அடித்துவிட்டு, கோரதமுட்டியை நோக்கி ஓடுவதில் உள்ள உற்சாகம்தான் மிக சுத்தமானது.

அந்த தீபாவளி ஓலைப் பட்டாசு காயப் போட மாடிக்கு சென்ற போது, பக்கத்து வீட்டு “எடுத்துக்கட்டி” யின் மேல் செருப்பு வைத்திருந்தது. அதில் ஏறினேன். பின்னால் யாரோ கஷ்டப்பட்டு முனகுவது போல் சத்தம் கேட்டது. உதவி தேவையோ என்று நான் சுவர் எகிறி குதித்து அந்தப் பக்கம் போய் பார்த்தபோது சந்தானமையங்கார் தலையில் முண்டாசு கட்டிக் கொண்டு, சின்னவை பல இடங்களில் தடவிக் கொடுத்து சிகிச்சை மாதிரி என்னவோ செய்து கொண்டிருந்தார். சந்தானமையங்கார் அடுத்த வீட்டுக்காரர்.

எங்களையெல்லாம் ஓட ஓட விரட்டுபவர். கிரிக்கெட் பால் உள்ளே போனால் திருப்பி தரமாட்டார். கண்டபடி திட்டுவார். அவர் வீட்டு சுந்தர் எங்களுடன் விளையாட வரமாட்டான். அவர்கள் எந்த விதத்திலோ பணக்காரர்களாம். கொலுவுக்கு சில்க் ஜமக்காளங்கள் போட்டு, பெட்ரோமாக்ஸ் வைப்பார்கள். சின்னா அவர் வீட்டு சமையல்காரி. ரவிக்கை முந்தானையில் அவள் சேகரித்து இருந்த கொய்யாக் காய்கள் சிதறிக் கிடந்தன. தரை எல்லாம் வியர்வையால் ஈரமாக இருந்தது.

சந்தானயைங்காரின் செருப்புதான் ‘எடுத்துக்கட்டி’ யில் மேல் வைத்திருந்தது. “என்ன மாமா பண்றீங்க “என்று கேட்டபோது அவர் திடுக்கிட்டு “இவளுக்கு உடம்பு சரியா இல்லை. மூச்சு வாங்கறதுன்னா… அதனால, தசமூலாரிஷ்டம் கொடுத்து சரி பண்றேன். போடா போடா… நீ எங்க இங்க வந்து தொலைச்சே… ஓடிப் போ” என்றார்.

“பட்டாசு காயப் போட வந்தேன். மாமியை கூப்பிடட்டுமா” என்றேன்.

“மாமி பெட்டவாத்தலை போயிருக்கா. சுவரேறி குதிச்செல்லாம் வரக்கூடாது. போலீஸ்காரன் புடிச்சுப்பான்” என்றார்.

இதையெல்லாம் கேட்காதது போல், சின்னா ஒரு மாதிரி மயக்கத்தில் கண் மூடிக்கொண்டு சற்றே நெற்றியை சுருக்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

நான் வீராகவனிடம் சொன்னேன். வீராகவன் எங்கள் கிரிக்கெட் காப்டன். “பாவம்டா அவ. மேல்மூச்சு வாங்கிண்டிருந்தது. சந்தான மாமா தடவிக் கொடுத்தார். இல்லைன்னா ரொம்ப கஷ்டப்பட்டிருப்பா” என்றேன்.

அவன் அதைக் கேட்டு கைகொட்டி கண்ணீர் வரச் சிரித்தான். “நீ கொக்கோகப் படம் எதும் பார்த்ததே இல்லையா? மார்கழி மாதம் உற்சவத்தில் விக்குமே?

“இல்லை…”

அவன் “வா” என்று உள்ளே சென்று பரண் மேல் கத்யத்ரயம் திவ்யபிரபந்தசாரம் போன்ற புத்தகங்களின் நடுவே செருகியிருந்த பழுப்பான புத்தகத்தை எடுத்து பிரித்துக் காட்டினான்.

“ஆமாண்டா, இப்படித்தாண்டா சந்தான மாமாவும் சின்னாவும் இருந்தா…”

அவன் ஒரு வக்கீல் போல பல கேள்விகள் கேட்டு இது தெரிந்ததா?, அது புரிந்ததா? என்றெல்லாம் கேட்டு, அவவப்போது குபீர் குபீரென்று சிரித்து, “அடிச்சடா லக்கி ப்ரைஸ்” என்று சொன்னது எனக்கு விளங்கவில்லை. அவ்வப்போது என் நண்பர்கள் என்னை மரியாதையுடன் பார்த்தார்கள். மீண்டும் மீண்டும் அந்த காட்சியை விவரிக்க சொல்லியே வதைத்தார்கள்.

“எனக்கு எல்லாம் புரியறது. ஆனா எதுக்குடா தலைல முண்டாசு? என்றான் பாச்சு.

“அதாண்டா ட்ரிக்கு. அதை கட்டிண்டா அடையாளம் தெரியாதாம். வேற யாரோனு நினைச்சுண்டுருவோமாம்” என்று வீரு விளக்கியது புரிந்தும் புரியாமலும் இருந்ததை அவன் என்னை ஒரு மாதிரி பார்த்து, “நீ ஒண்ணு பண்ணு. அவர்கிட்ட போய் ‘மாமா மொட்டை மாடில ஓலைப்பட்டாசு காயப்போட போயிருந்த போது உங்களையும் சின்னாவையும் பார்த்துட்டேனே. மாமி பெட்டவாத்தலைலேர்ந்து வந்தாச்சா’ ன்னு… அவாள்லாம் சீட்டாடிண்டிருப்பா… அங்க போய்க் கேட்டு பாரு…”

“ஐயோ… போடா… தோலை உரிச்சுருவார்…”

“அதான் இல்லை. பாரேன் நடக்கிறதை. எதுக்கும் ஓடத் தயாராவே இரு. ஓரமா நின்னு கேட்டுட்டு வந்துரு. நடக்கிறதைப் பாரேன்.

அவர்கள் மிகவும் கட்டாயப்படுத்த நான் மெள்ள தைரியம் பெற்று பக்கத்து வீட்டு திண்ணைக்கு நழுவி ஓரத்தில் உட்கார்ந்தேன். வெள்ளி செம்பில் காபியும், பத்தமடை பாயுமாக “ஆஸ்” ஆடிக் கொண்டிருந்தார்கள். புகையிலையை துப்பிவிட்டு வாய் கொப்பளிக்க வரும்போது என்னை பார்த்து சந்தானமையங்கர் திடுக்கிட்டு “என்னடா? என்றார்.

“மாமா, மாடில ஓலைப் பட்டாசு பெருந்தேவி மாமி வந்தாச்சா பெட்டவாத்தலைலருந்து? இவ்வாறு ஆரம்பித்தவுடன் “வாடா” என்று என்னை அப்படியே அலாக்காகத் தூக்கி உள்ளே செலுத்தி, என் வாயில் கல்கண்டு, அரிசி பப்ரமுட்டு, லேக்கா உருண்டை என்று இனிப்பான வஸ்துக்களை திணித்துவிட்டு “என்ன பார்த்தே, சொல்லு…”

“நீங்க சின்னாவுக்கு சிகிச்சை எதும் பண்ணலை” என்றேன்.

“பின்ன என்னவாம் அது?

“வீரு சொல்றான் கொக்கோகமாம் அது…”

“மாமிகிட்ட சொல்லாதே, சொல்லாம இருந்தா உனக்கு என்ன வேணும் சொல்லு? சொல்லுடா கண்ணு…”

நான் யோசித்து “எனக்கு சிங்க மார்க் பட்டாசு ஒரு சரம், ஒத்தை வெடி ஒரு டஜன், ரெட்டை வெடி ஒரு டஜன், கேப்பு துப்பாக்கி, குதிரைவால், தரைச்சக்கரம், ஊசிப்பட்டாசு, ராக்கெட், ஏரோப்ளேன், விஷ்ணு சக்கரம், லட்சுமி வெடி அப்புறம் பத்த வெக்க மட்டிப்பால் வத்தி” என்று என் சக்திக்கேற்ப ஒரு பட்டியல் சொல்லிப் பார்த்தேன்.

அவர் எழுந்து அலமாரிக்குச் சென்று ஒரு காகிதத்தில் எழுதி “இதைக் கொண்டு போய் டி.பி.ஜி. கடையில கொடு. உனக்கு வேணுங்கறதை வாங்கிக்கோ. ஆனால மாடில என்ன பார்த்தே?

“ஓலைப் பட்டாசு காயப் போடறப்ப உங்களையும் சின்னாவையும்.

“ஏய்… யாரும் கேட்டா அங்க ஏதும் பார்க்கலைன்னு சொல்லணும்… அப்பத்தான் பட்டாசு.

“சரி மாமா” என்றேன்.

“சரி மாமா” என்று என் தலையில் நெத்தினார்.

அந்த தீபாவளிக்கு நானும் வீரராகவனும் ஆசை தீர பட்டாசு வெடித்ததும் அல்லாமல், கார்த்திகைக்கும் நிறைய பாக்கி வைத்தோம். பாட்டி “ஏதுரா இத்தனை பட்டாசு? என்றதற்கு “நாங்கள்லாம் சேர்ந்து சந்தா கட்டி வாங்கினோம் பாட்டி” என்று புளுகினேன்.

அடுத்த தினங்களில் நான எப்போது சந்தானமையங்காரை பார்த்தாலும் “இங்க வாடா” என்று உள்ளே பரிவுடன் அழைத்து “சர்க்கரைப் பொங்கல் சாப்பிடறியா? வறுத்த பாதாம் பருப்பு வேணுமா? அரவணை வேணுமா? என்று தின்னக் கொடுத்துக் கொண்டேயிருந்தார்.

சில நாட்களில் தைரியம் பெற்று, “மாமா தெற்கு வாசல்ல புதுசா ஒரு பம்பரம் வந்திருக்கு. கோல் எடுத்தா கைல அப்படியே பூனைக்குட்டி மாதிரி தூங்கறது மாமா” என்றால்

“உடனே போய் ரெண்டு பம்பரமா வாங்கிக்கோ. தலையாரில குத்து பட்டா மாத்து பம்பரம் வேணுமோ இல்லையோ? என்பார். அப்புறம் மேலும் தைரியம் பெற்று நிஜ கிரிக்கெட் பந்து, ஸ்டம்ப் எல்லாம் கேட்டுக் கூடக் கொடுத்துவிட்டார்.

பெருந்தேவி மாமி “என்ன இப்படி இந்தப் பிள்ளைக்குச் செல்லம் கொடுக்கறீங்க? என்று கேட்டதற்கு “பையன் நன்னா படிக்கறான். அதுக்கு ஒத்தாசை பண்ணலாம்னு” என்றார் என்னைப் பார்த்து கண் சிமிட்டி.

இவ்வாறு இனிதாகக் கழிந்து கொண்டிருந்த தினங்கள் அதிகம் நீடிக்கவில்லை. வீரு “ஒரு பார்க்கர் பேனா கேட்டுப் பார்” என்று சொல்ல சந்தானமையங்கார் வீட்டுக்குள் சுதந்திரமாக நான் நுழைய மரவேலைப்பாடுகள் நிறைந்த கறுப்பு மேசை கண்ணாடியில் தெரிய விறுவிறுப்பாக தன்னை விசிறிக்கொண்டு சந்தானமையங்கார் குறுக்கும், நெடுக்குமாக நடந்து கொண்டிருக்க, பக்கத்தில் அவர் மனைவி பெருந்தேவி கோபத்துடன் அழுதுகொண்டிருக்க, அருகே ஓரத்தில் சின்னா வாயை முந்தானையால் பொத்தி அவளும் அழுது கொண்டிருந்தாள். என்னைப் பார்த்ததும் மாமி “வாடா…இந்த பிராமணன் செய்த அநியாயத்தை பார்த்தாயோ… மொட்டை மாடில சின்னாவை கூட்டி வெச்சுண்டு…”

“ஏய் நீ போடா…”

“ஏண்டி அந்த பிராமணன்தான் துப்புக்கெட்டு போய் உன் கையை புடிச்சான்னா உன் புத்தி எங்கடி போச்சு? இடுப்பொடிஞ்ச சக்களத்தி, நீ நல்ல பாம்புக்குட்டி, சக்கை திங்க வந்தவளே” அதன் பின் “உனக்கு குளிர் காய்ச்சல் வர… உனக்கு பாடை கட்ட” என்று பலமாக திட்டியதில் சின்னா, “கிணற்றில் விழப் போகிறேன்” என்று புறப்பட எனக்கு அழுகை வந்து விட… “பாருங்கோ…. இந்த பிள்ளை கூட வருத்தப்படறது. உங்களுக்கு வெக்கமா இல்லை… ஓசிச் சிறுக்கி.

நான் அழுதது அதற்காக இல்லை. சந்தானமையங்காரிடம் என் ப்ளாக்மெயில் இப்படி திடீரென்று மதிப்பிழந்து போய் விட்டதே என்றுதான்!

அடுத்த தீபாவளிக்கு பழையபடி ஐந்து ரூபாய்க்கு ஓலைப்பட்டாசு, வேட்டுக் குழாய்தான்.

அந்த தீபாவளியை மறக்க முடியாது தான். அந்த வயசிலேயே எனக்கு கொஞ்சம் அவசரப்பட்டுக் கிடைத்த சில சில ஞானங்களால் அறியாச் சிறுவன் அறிந்த சிறுவனாகிவிட்டேன். அது என் பிற்கால வாழ்க்கையை எவ்வளவு தூரம் மாற்றிவிட்டது! என் பிழைப்பே இந்த மாதிரி மற்றவர் பற்றி தகவல் அவதூறு சேகரித்து விலை பேசுவதாகி, அதைப் பயன்படுத்திக் கொண்டு பணம் சேர்ப்பதாகி விட்டது.

எத்தனையோ பேரை என் நளின மூர்க்கங்களில் பயமுறுத்தி நிறையவே காசு சேர்த்து விட்டேன். இப்போது தீபாவளிக்கு என் இரண்டு மனைவியருக்கும் எட்டாயிரம் ரூபாயில் புடவை எடுக்கிறேன். என் பிள்ளைகள் தொடர்ந்து அறுபது நிமிஷம் வெடிக்கும் ஆயிரம் ரூபாய் சரமெல்லாம் வெடிக்கிறார்கள்.

நான் பண்ணையில் போய் உட்கார்ந்து கொண்டு, என் நாய்களுடன் பேசுகிறேன். “சீஸர், ரீட்டா…அந்த தீபாவளியன்று சந்தானமையங்காரை மாடியில் பார்த்திராவிட்டால், நான் எங்காவது பி.காம். படித்து விட்டு ரயில்வே கிளார்க்காக நிம்மதியாக இருந்திருப்பேனே!

ஆம்! என் முதல் பொய், முதல் பெண் தரிசனம், முதல் பணம் பிடுங்கும் வழி எல்லாமே அந்த தீபாவளியில்தான் துவங்கி திருத்த முடியாமல் விகாரப்படுத்தப்பட்டேன்.

காரணம் – ஓலைப் பட்டாசு!

# ஓர் உத்தம தினம் - சுஜாதா

ஜன்னல் வழியாக ஆதவன் தலையெடுக்கும் முன்னமேயே புல் தரையில் சிறு குழந்தைதவழ்ந்து வருகிறது. களுக்கென்று சிரிக்கிறது. அதனால் நடக்க முடியுமா என்று கவலையாகஇருக்கிறது. அதற்குப் பெயர் இருக்கிறது. பறந்து வந்து விளிம்பில் உட்கார்ந்துவிட்டுஅறைக்குள் சிற்றடி வைத்து இறங்கி, அவளருகில் வந்து அவள் மார்பைச் சுதந்திரமாகத்திறந்துகொண்டு, ஏங்கி ஏங்கிப் பால் குடிக்க… அதன் சின்ன விரல்கள் அவள் முலையைநெருட… உள்ளுக்குள் திகட்டிய சந்தோஷத்தைக் கலைக்க விருப்பமின்றி இன்னும் இன்னும்என்று ஒரு விளிம்பைத் தொட்டு ஒரு கணத்தில் சகலமும் வெடித்துப் புலனாகி விழித்தபோது,"நீங்களா?" என்றாள்.

சத்தீஷ் திருப்திப்பட்ட நிலையில் மல்லாந்து படுத்துக்கொண்டு புன்னகையுடன் தூக்கத்தின்இரண்டாம் பாகத்தைத் துவங்கினான். கஸ்தூரி தன் உடைகளை அவசரமாகச்சரி செய்துகொண்டு எழுந்து, ஜன்னலைத் திறந்து சில்லென்ற காற்றிலும் சூரிய வெளிச்சத்திலும்முகத்தை அலம்பிக்கொண்டு திரும்பி நிதானமாகக் கணவனைப் பார்த்தாள்.

என் கனவில் புகுந்து என் கனவைக் கலைக்காமல் எனக்குள் நிரம்பிய என் கணவனே!

"எழுந்திருங்க" என்று தலையைக் கலைத்தாள். அவன் விழித்து அவளைப் பரிச்சயமே இல்லாதபுதியவளைப் போலப் பார்த்துப் புன்னகைத்து, "ஹேப்பி பர்த்டே தில்லு! ம்ம்ம்… உன்னைவாசனை பார்க்கணும், வா!" என்று கையை விரித்து விரல்களால் அழைத்தான்.

"ம்ஹூம். நான் மாட்டேம்பா. எனக்கு எத்தனையோ வேலை இருக்கு."

"ஒரு தேங்க்ஸ் முத்தம்கூடக் கிடையாதா?"

"கிடையாது."

டெலிபோன் ஒலிக்க, அதைப் படுக்கையில் இருந்தே எடுத்து ஆன்டெனாவை நீட்டிக்கொண்டு,"ஹலோ?" என்று அதட்டினான். சற்று நேரத்தில், "உனக்குத்தான்" என்று கொடுத்தான்.

"என்ன எழுந்துட்டியா, ஹேப்பி பர்த்டே" மஞ்சுவின் குரலை டெலிபோன்கூட அசைக்க முடியாது.

"தேங்க்ஸ் மஞ்சு."

"உனக்கு என்ன வயசுன்னு கேக்கலை. வயசு முக்கியமா என்ன? இந்த வருஷமாவது பெத்துண்டுடு. ரொம்பத் தள்ளிப் போடாதே."

"மஞ்சு, இன்னிக்குக் காலையில என் வாழ்க்கையிலேயே மறக்க முடியாத ஒரு கனாகண்டேன். அதை உனக்கு விரிவா சொல்லியே ஆகணும். எப்ப வரே?"

"எப்ப வேணும்னாலும் வரேன். தில்லுவோட பர்த்டேக்கு வராம இருப்பேனா? உன் ஹஸ்பண்ட்என்ன பிளான் வெச்சிருக்கார்னு கேட்டுக்கோ."

"அவருக்கென்ன… வழக்கம்போல் ஆபீஸ் போவார்."

சத்தீஷ் படுக்கையிலிருந்தே, "இல்லை… இல்லை… நாமிருவரும் வெளியே போறோம்" என்றுஜாடை காட்டினான்.

"மஞ்சு, அவர் எங்கேயோ வெளியே போகப் பிளான் வெச்சிருக்கார்."

"ஆல் தி பெஸ்ட் தில்லு. போன் பண்ணிட்டு மத்யானம், சாயங்காலம், ராத்திரி எப்பவாவதுஒரு சமயம் வந்து உன் கன்னத்தில் முத்தம் கொடுத்துட்டுத்தான் போவேன். பை தில்லு!மெனி ஹேப்பி ரிட்டர்ன்ஸ்!"

டெலிபோனை வைத்தபோது அது 'டிரிரிக்' என்றது பறவைபோல.
"மஞ்சுதானே! ஒழிஞ்சுதா?"

"சே! இன்னிக்கு யாரையும் திட்டக் கூடாது. அப்படிப்பட்ட நாள் இன்னிக்கு."

அவளைப் பிடித்து இழுத்துக் கன்னத்தை உரசிக் கூந்தலுக்குள் கை செலுத்தி நிமிர்த்தி, ”ம்,என்ன கனா? சொல்லு!” என்றான்.

”கையெடுங்க. சொல்றேன்.”

”எடுத்தாச்சு.”

”அந்தக் கை.”

”அதுபாட்டுக்கு அது. சொல்லு, என்ன கனா?”

”ஜன்னல் வழியா கிருஷ்ண விக்கிரகம் மாதிரி… ஐயோ, என்ன விஷமம்! நான்சொல்ல மாட்டேன்.”

”சரி, இப்ப?” இடுப்பை வளைத்து அவளைத் தன்னிடம் இழுத்துக்கொண்டு முகத்துக்கு முகம்ஒரு இன்ச் பண்ணிக்கொண்டு ”ம், சொல்லு” என்று இழுத்தான்.

”ஜன்னல் வழியா தங்கக் கலர் குழந்தை வந்து அப்படியே எம் மேல படிஞ்சு உடம்பெல் லாம்முலாம் பூசினாப்ல குளுகுளுன்னு ஊர்றது.”

”மை டியர் தில்லு! அது குழந்தை இல்லை நானு! வி ஹேடு செக்ஸ்.”

”ச்சே! உங்களைப் போல எல்லாத்தையும் போட்டு உடைக்கிற ஆசாமி கிடையாது.”

இடுப்பின் உடைகளைத் தளர்த்தத் துவங்கவே, விஷயம் கவலைக்கிடமாகும் என்று க ஸ்தூரிநழுவி எழுந்து பாத்ரூமுக்குச் சென்றாள்.

பல் தேய்த்து முகத்தில் தண்ணீர் தெளித்துக்கொள்ளும்போதும் உற்சாகம் மிச்சமிருந்த து.ஜன்னலைத் திறக்க வானம் மேகங்களற்று ‘விம்’ போட்டு அலம்பினாற் போல இருந் தது.கொன்றை மரத்தில் அந்த மாம்பழக் குருவியைப் பார்த்தாள். அவள் பிறந்த தினத் துக்கென்றேதனிப்பட்ட விஜயம் போல் தங்கத் தலையை வைத்துக்கொண்டு, ‘ச்சீயோ, ச்சீயோ’ என்றுதேவதூதனைப் போலக் கூப்பிட வந்திருக்கிறது.

நடுவே, தெளிவாக அந்தக் குருவி அவளைத் ‘தில்லு’ என்று பெயர் சொல்லி அழைத்த தைகஸ்தூரி எல்லா கோயில்களிலும் சத்தியம் பண்ணுவாள். நிச்சயம் இன்றைக்குப் பிறந்ததினம்தான். எனக்கு மட்டுமில்லை. எனக்குள் உத்தரவாதமாகப் புகுந்திருக்கும் அதற்கும்தான்.

சத்தீசுக்குக் காபி போட்டுக்கொண்டு போர்வையை விலக்கி, அவன் தலையைக் கலை த்து,”எழுந்திருங்க. ஆபீஸ் போக வேண்டாம்?” என்று கேட்டாள்.

”இன்னிக்கு ஆபீஸ் லீவு! உனக்குப் பிறந்த நாள் இல்லையா?”

”நாள் முழுக்க வீட்லயா இருக்கப் போறீங்க?”

”வீட்ல இருக்கலாம். வெளியவும் போகலாம். அல்லது ஏ.ஸி. போட்டுட்டுக் கட்டிண்டுப டுத்துரலாம். இன்னிக்கு ராணி நீதான்.”

”கோயிலுக்குப் போயாகணும்.”

”ப்ரேக்ஃபாஸ்ட்டுக்கு எம்.டி.ஆர். போகலாமா?”

”முதல்ல கோயில். அப்புறம்தான் பாக்கியெல்லாம். ஜெயநகர் போய் அம்மாவையும்சர ண்யாவையும் பார்த்துட்டு வந்தே ஆகணும்.”

”சாயங்கால ஃப்ளைட்ல பம்பாய் போறதுக்குள்ளே முடிச்சிரணும்.”

”பாம்பே போறீங்களா? சொல்லவே இல்லையே?”

”போர்டு மீட்டிங். நாளன்னிக்கு மார்னிங் ஃப்ளைட்ல திரும்பி வந்துடுவேன்.”

புதுசாக கார், லாரி வாங்கினவர்கள் எல்லாம் பள்ளத்து பிள்ளையாருக்கு முன் வரிசை யாகத்தத்தம் வாகனங்களை நிறுத்தியிருந்தார்கள். மல்லிகையும், அகர்பத்தியும், பட்டு

ப் புடவையும்,இளங் காலையும், விபூதியும் கலந்து ஆரோக்கியமாக வாசனை அடித்த து. சத்தீஷ்பாசாங்கோடு மனைவியைக் கவனித்துக்கொண்டு இருந்தான். கஸ்தூரி வே ண்டிக் கொண்டாள்.

”கடவுளே! ஏன் இத்தனை உத்தமமான தினம்?”

”இந்தாம்மா புஷ்பம்” என்று ஒரு சிறுவன் பளிச்சென்று திருநீறும் இந்த வயசுக்குவேஷ் டியுமாக வந்து கொடுத்துச் சிரித்தான்.

பிளாட்ஃபாரத்தில் நடக்கையில், ”எல்லாமே நல்லபடியாக இருக்கு. காலங்கார்த்தால அந்தக்கனா, அந்தக் குருவி என்னைப் பேர் சொல்லிக் கூப்பிட்டது, இந்த அழகான பை யன்...” என்றுகூறினாள்.

”த பாரு, இன்னி முழுக்கவே இப்படித்தான். சொல்லிண்டிருக்கப் போறியா? மஞ்சள், கு ருவி,கிருஷ்ண விக்கிரகம், விநாயகர் பிரத்தியட்சம், இப்படி...?”

”நிச்சயம் எனக்கு இன்னிக்கு என்னமோ ஆயிருக்கு. உடம்பு பூரா பதர்றது.”
மாருதியில் ஏறிக்கொள்ள, ”தில்லு, உலகத்திலேயே ரொம்ப சுலபமான விஷயம் எது தெரியுமா?” என்று கேட்டான்.

”தெரியும், சொல்ல வேண்டாம்.”

”யு வான்ட் தி சைல்டு இல்லையா? வேணும்னா சந்தேகத்துக்கு சாம்பாரா வீட்டுக்குப் போய்இன்னுமொரு முறை ஊர்ஜிதம் பண்ணிரலாமா?”

”சே, புத்தி போறதே!”

ஜெயநகரில் மணிப் பொத்தானை அழுத்தியபோது சத்தீஷ், ”இதோ பாரு! அரை மணி, அதுக்குமேல் அரட்டை கிடையாது” என்று கிசுகிசுத்தான். கதவு திறக்க,

”ஹலோ, கர்னல்!”

அப்பாவைத் தாரிணியின் குழந்தைகள் உள்பட எல்லோரும் ‘கர்னல்’ என்றுதான்கூப்பி டுவார்கள்.

கஸ்தூரியைப் பார்த்ததும் கட்டிக்கொண்டு உச்சியில் முத்தம் கொடுத்து, ”ஓ மை ஸ்வீ ட்தில்லு, ஹேப்பி பர்த்டே” என்றார்.

”தேங்க்யூ, கர்னல்.”

”இங்கிலீஷ் தேதிப்படி லெவன்த் செப்டம்பர், இன்னிக்கு உனக்கு 25. நீ பிறந்தப்ப விஜய வாடாடூர் போயிருந்தேன் கிருஷ்ணா ரிவர்ல வெள்ளம் அதிகமாயி ரயில் எல்லாம் கு ளோஸ்பண்ணிட்டான். டக்கோடா ஃப்ளைட்டைப் பிடிச்சுக் காலங்கார்த்தால வந்துட் டேன். தில்லு டியர்!பெரி யாழ்வார் பாசுரம் சொல்லிண் டிருக்கியா?”

”தவறாம! தினம் பெரியாழ்வாருக்காகத்தானே நான் எழுந்திருக்கிறேன்” என்றான் சத்தீ ஷ்.

”தட்ஸ் மை கேர்ள். சின்ன வயசிலேயே நாலாயிரமும் ஒப்பிப்பா. மாப்பிள்ளை, இவ மு ழுப்பேர் கஸ்தூரி திலக்கா. நாங்க எல்லோரும் தில்லுன்னுதான் கூப்பிடுவோம். கஸ் தூரின்னு பேர்எப்படி வந்ததுன்னு தெரியுமா?”

”கர்னல் இதை என்கிட்டேயே முப்பது தடவை சொல்லியாச்சு” என்றான் சத்தீஷ்.

கஸ்தூரி, கணவனை முறைக்க... அவன் கடிகாரத்தைச் சுட்டிக் காட்டினான். ”வர்றோம் கர்னல்”என்றான்.

”சேச்சே, லஞ்ச் சாப்பிட்டுட்டுதான் போறீங்க!”

”தேர் கோஸ் மை எம்.டி.ஆர்.”

”அம்மா, நீங்க சும்மாருங்கோ. அவா வேற ஏதாவது பிளான் போட்டு வெச்சிருப்பா” என் றுஇடைமறித்தாள்.

அம்மா தனியாகக் கூப்பிட்டு, ”இன்னும் குளிக்கிறியா?” என்றாள்.

”ஆமாம்மா.”

”எல்லாம் போறும். அப்புறம் நாளாயிருந்துன்னா பிற்காலத்தில் வளர்க்கிறது கஷ்டம். இந்தப்புரட்டாசிக்கு இருபத்தஞ்சு முடிஞ்சுர்றது உனக்கு.”
அப்பா வந்து, ”தில்லு, மாப்பிள்ளை டூர் போறாராமே. இங்கே வந்து இரேன்?” என்றார்.

”இல்லைப்பா, ராத்திரி துணைக்கு வேலைக்காரப் பொண்ணு வரும். செக்யூரிட்டி இருக்கு.சௌக்கிதார் இருக்கான்.”

”எங்காத்திலெல்லாம் வந்து படுத்துப்பியா, ரிச் கேர்ள்.”

”அப்படி இல்லைப்பா. இவர் இல்லாதபோதுதான் வீட்டை ஒழிக்க முடியும்.” முக்கிய காரணம்அதில்லை. தனியாக வீடியோ பார்க்க வேண்டும் என்று தில்லு தீர்மானித்துவிட்டாள்.

ரேஸ் கோர்ஸ் வழியாக ஆபீசுக்கு வந்து பதினைந்து நிமிஷம் என்று சொல்லிவிட்டுச் சென்றான். பேண்ட் வாத்தியமும் பொய்க்கால் குதிரையுமாக கணேசா ஊர்வலம் ஏரியில்முங்குவதற்காக டெம்போவில் சென்றுகொண்டு இருக்க, பொய்க்கால் குதிரைக்காரன் கூலிங்கிளாசும், பொய்த் தாடியும், ஜிகினா ஜிப்பாவுமாக அவளைப் பார்த்துச் சிரித்துவிட்டுப் போனான்.
சத்தீஷ் திரும்பி வந்து, ”முக்கியமா மூணு ஃபைல் பார்த்துட்டேன். ஏர் டிக்கெட் கன்ஃபார்ம்ஆயிடுத்து. சாயங்காலம் வரை நாம ஃப்ரீதான். எங்கே போகணும் சொல்லு?” என்றான்.

”எங்கேயாவது!”

”சரி லெட்ஸ் கோ டு ‘எங்கேயாவது’…”

ஸோஃபியா கான்வென்ட்டின் ஆரோக்கியமான ‘ஹன்’களும் கூட்டம் கூட்டமாகச் சட்டைஅணிந்த ஆயிரம் உற்சாகப் பெண்களும்… நீச்சல் குளத்தில் உன்னதமாகக் குதித்த ஒரேஇளைஞன். மரத்தடியில் டிராஃபிக் சந்தடியில் படுத்துத் தூங்கிக்கொண்டு இருந்த உழைப்பாளி.கீரை விற்றுக்கொண்டு இருந்த கறுப்புப் பெண்ணின் அருகில் சாக்கின் மேல்தூங்கிக்கொண்டிருந்த தேவதைக் குழந்தையின் அரைஞானில் முடிந்திருந்த தாயத்து. இந்தசுசுகியில் ஒரே மாதிரி ஜீன்ஸ் அணிந்து பையனும் பெண்ணும் எல்லோருமே சந்தோஷமாகஇருக்கிறார்கள் என்னைப் போல…. என்னைப் போல.

ஏன் இந்தத் திகட்டும் சந்தோஷம்? விண்ட்சர் மேனரில் ஐஸ்க்ரீம் புடிங் வகைகளிலேயே பத்துதினுசு சாப்பிட்டாள். பெங்காலி போலிருந்த இளைஞன் சின்தஸைஸர் டிரம் அடிக்க… மைக்கைமுழுங்குகிற மாதிரி வைத்துக்கொண்டு ஸ்டீவி வாண்டர் பாடினான்.

மிக அழகான ஒரு வெயிட்டர் இளைஞன் அவளருகில் பூச்செண்டு கொண்டுவந்து, ”மேடம்!ஹேப்பி பர்த்டே” என்றான். ஆச்சர்யப்பட்டு சத்தீஷைப் பார்க்க, அவன் மனோகரமாகக்கண்ணடித்தான். அந்த மலர்க் கொத்து செலஃபன் தயவில் புதுசு கலையாமல் அவளைஅணைத்துக்கொண்டது. பக்கத்து டேபிள் குண்டுகுழந்தை வேடிக்கை பார்த்துக் கொண்டுஇருந்தது. இவள் ‘வா’ என்று அழைத்ததும் ஓடி வந்துவிட்டது.

”பிங்க்கு பேட்டே இதர் ஆவோ.”

‘லேஸ் மேக்கர்’ போக வேண்டாம் என்று கப்பன் பார்க்கில் கொஞ்ச நேரம் லைப்ரரியில்உலவிவிட்டு, ஒரு கவிதைத் தொகுப்புடன் வெளியே வந்து, மண்டபத்தின் அருகில் மரஅடர்த்தியின் கரும் பச்சை நிழலில் ஒரு பெஞ்ச் காலியாக இருக்க, அதில் அவள்உட்கார்ந்துகொள்ள அவள் மடி மேல் தலைவைத்து,

”ஜென்னி கிஸ்ட் மீ படிக்கட்டுமா?”

”படிங்க.”

”ஜென்னி என்னை முத்தமிட்டாள் சட்டென்று நாற்காலியிலிருந்து எழுந்து வந்து! காலம்என்னும் கள்ளனே! உன் பட்டியலில் எத்தனையோ இனிய விஷயங்களைச் சேர்த்துக்

கொள்ளவிரும்புகிறாயே, இதையும் சேர்த்துக்கொள். நான் களைத்திருக்கிறேன் என்று சொல். நான்சோகமாக இருக்கிறேன் என்று சொல். ஏழை என்று சொல். உடல் நலமில்லை என்று சொல்.வயசாகிக் கொண்டிருக்கிறேன் என்று சொல். ஆனால், ஜென்னி என்னை முத்தமிட்டாள்என்பதையும் சொல்."

பிற்பகலின் அமைதியில் தூரத்தில் நகரத்தின் சந்தடி கேட்க மடி மேல் கணவனை அமைதியாகஅழுத்திக்கொண்டு அவன் முகத்தையே ஒரு மணி நேரம் பார்த்துக்கொண்டு இருந்தாள்.நிச்சயம் இன்றைக்குத்தான் நிகழ்ந்திருக்கிறது!

இரண்டு நாளுக்காக மெத்தென்ற பெட்டியில் அவன் சூட், வெள்ளை வெளேர் சட்டைகள்,அவன் மாத்திரைகள், ஷேவிங் சாதனங்கள், ஆஃப்டர் ஷேவ் லோஷன், தங்க விளிம்பிட்ட சீப்பு,ஆண் பிள்ளை கர்ச்சீப், அவன் ஃபைல்கள் எல்லாவற்றையும் அடுக்கிவைக்கையில், குறும்பாகத்தன்னுடைய 'ப்ரா' ஒன்றையும் இடையில் செருகி மூடினாள்.

பம்பாய் ஃப்ளைட் எட்டரைக்குத்தான் கிளம்பும் என்றார்கள். பேப்பர் கப்பில் சத்தீஷுடன் காபிசாப்பிட்டுவிட்டு இருவரும் புத்தகம் பார்த்தார்கள். ஏர்போர்ட் ஜனங்களை வேடிக்கைபார்த்தார்கள். குல்லாயும், தொப்பியும், குங்குமமும், இடது பக்கம் ஸாரியும், அரசியலும்,சூட்டும் கோட்டும், வெற்றியும், சவரம் செய்த பச்சை முகங்களும், நாசூக்கான அழுகைகளும்...

"நான் களைத்திருக்கிறேன் என்று சொல், ஏழை என்று சொல், உடல் நலமில்லை என்று சொல்,வயசாகிக்கொண்டிருக்கிறேன் என்று சொல், சத்தீஷ் என்னை முத்தமிட்டான் என்பதையும்சொல்."

செக்யூரிட்டி கேட்டில் நுழையுமுன் சத்தீஷ் திரும்பிக் காற்றில் 'கேஸி' என்று வரைந்து காட்ட,அதன் அந்தரங்க அர்த்தம் அவள் கன்னங்களில் ரத்தம் பாய, கண்ணாடிக்குப் பின்னாலிருந்துசின்னதாக நாலு விரல் டாட்டா காட்டிவிட்டு மறைந்தான்.

மாருதியை பேஸ்மென்ட்டில் நிறுத்திவிட்டு, கதவைத் தன் சாவியால் திறந்து உள்ளே வந்துஉடை மாற்றி, படுக்கையறைக்குச் சென்று, பசியின்றி ஒரு சாண்ட்விச் தயாரித்து, 'விசிஆரை'இணைத்து, கல்யாண கேஸட்டை நுழைத்து, ரிமோட் கன்ட்ரோலை எடுத்து, மூன்றுதலையணைகள் அமைத்து, விளக்கைத் தணித்துவிட்டு,
'ப்ளே' பொத்தானை அழுத்தினாள்.

எதிரே டெலிவிஷன் திரையில் மறுபடி சத்தீஷைக் கல்யாணம் செய்துகொள்ள ஆரம்பித்தாள்.சத்தீஷ் சின்னப் பையன் போல கன்னத்தில் மை, நெற்றியில் அலையும் தலைமயிர், மஞ்சள்சரிகை வேட்டியில் பஞ்சகச்சம், அசௌகரியத்தில் வாத்தியாரைக் கனவுக் கண்களுடன்பார்த்துக்கொண்டே, அவ்வப்போது சாஸ்திரத்துக்கு மந்திரம் சொல்ல, கண்கள் மையிட்டகண்கள் அலைய சத்தீஷ் எவ்வளவு அழகாக இருக்கிறான்.

நெற்றியில் அம்மா அவனுக்குப் பொட்டு இடுகிறாள். அத்தை, சித்தி, தாரணி, பேபி அம்மாஎல்லாரும் மஞ்சள் நீரை இறைத்துக்கொண்டே சுற்றிச் சுற்றி வருகிறார்கள். கால் அலம்பிப்பாய் மேல் வைக்கிறார்கள். சத்தீஷ் கட்டை விரலைப் பிடித்துப் படிப் படியாகச் சம்பந்தாசம்பந்தமில்லாமல் பேசுகிறான். என்னைவிட சத்தீஷ்தான் நெர்வஸ்.

கர்னலின் மடியில் உட்கார்ந்திருக்க என்னை நெற்றியில் எங்கோ பார்க்கிறான். தாலி கட்டியபின் அம்மாவின் கண்களில் கண்ணீர். எல்லோருமே கட்டிப் பிடித்துக்கொண்டு, கைகுலுக்கிக்கொண்டு, இது என்ன புது வழக்கம்?
ரிசப்ஷனில் ஜெயராமன் கச்சேரியில் சிமென்ட் கலர் சூட்டு போட்டு நிற்க,மத்தியானத்திலிருந்து ப்யூட்டிஷியன் எனக்குச் செய்த அலங்காரம் எனக்குப் பிடிக்கவேஇல்லை. ஏதோ விக்ரமாதித்தன் பதுமை மாதிரி, அலுங்காமல் ஆயில் மேக் அப் என்றுஎண்ணெய் வழிந்துகொண்டு...

வீடியோ முடிந்து கீற்றல் வந்த பின்னும் சற்று நேரம் திரையையே பார்த்துக்கொண்டு இருந்தாள். பின் அணைத்தாள்.

"அன்புள்ள கடவுளே, நான் உனக்கு எப்படி இந்த மகத்தான, உத்தமமான தினத்துக்கு வந்தனம்சொல்ல வேண்டும்? ஏன் இத்தனை சந்தோஷம்? ஏன் இத்தனை வெளிச்சம்? ஏன் இத்தனைஉற்சா கம்? ஏன் இப்படி ஒரு ஸ்படிக சுத்தமான தினம்? தயவுசெய்து இதற்கு மேல் சந்தோஷம்தராதே. தாங்காது. எனக்கு இது போதும். இது போதும்!"

கஸ்தூரி தூங்கிப் போய்ப் பத்து நிமிஷத்தில் டெலிபோன் ஒலித்தது!

## நகர்வலம்! - சுஜாதா

அந்தப் படகு மிகப் பெரிதாக இருந்தது. எனினும், அதைக் கப்பல் என்று சொல்ல முடியவில்லை. கேளிக்கையும் சந்தோஷமும் நிறைந்த பிரயாணங்களுக்காக ஏற்பட்ட பெரிய படகு அது. அதன் மேல்தளத்தில் மிகவும் இயல்பான நிலையில் நின்றுகொண்டும் உட்கார்ந்து கொண்டும் சூரிய வெளிச்சத்தில் படுத்துக்கொண்டும் ஒரு கனவுச் சதுரம் போலிருந்த சிறிய நீச்சல்குளத்தில்(வெந்நீர்) சோம்பேறித் தனமாக நீந்திக்கொண்டும் இருந்த சந்தோஷ மனிதர்களில் ஆத்மா நித்யாவுக்காகக் காத்திருந்தான். தன் கையில் இருந்த புத்தகத்தில் கவனம் இல்லாமல்… எதிரே நீந்திக்கொண்டு இருந்த நித்யாவின் அவ்வப்போது தெரிந்த உடல் வடிவ அழகைப் பார்த்துக் கொண்டு இருந்தான். படகு அத்தனை வேகத்தில் செல்வது தெரியவே இல்லை. அதன் வயிற் றில் இருந்த சிறிய அணு மின்சார நிலையத்தின் சக்தியில் அது கடல் பரப்பின்மேல் ஒரு காற்று மெத்தையில் மிதந்து சென்றது.
ஆத்மாவுக்கு அந்தப் பிரயாணம் அவன் வாழ்வின் ஆதர்சங்களில் ஒன்று… இன்னும் பதினைந்து நிமிடங்களில் படகு சென்னையை அடையப்போகிறது.
சென்னை!

அவன் முன்னோர்களின் ஊர்! அவன் தாத்தாவுக்குத் தாத்தாவுக்குத் தாத்தாவுக்கு… அவர்கள் குடும்பத்துக்கு ஒரு வீடு அங்கே இருந்திருக்கிறது. அது என்ன இடம்? திருவல்லிக்கேணி…தேரடித் தெரு… கோயிலின் அருகில்…கம்ப்யூட்டர் தந்த விவரம்…

மார்பில் ‘வழிகாட்டி ‘ என்ற வாசகம் எழுதப்பட்ட ஓர் இளைஞன் ஆத்மாவுக்கு முன்னால் வந்து புன்சிரித்து, ”எல்லாம் சௌகர்யமாக இருக்கிறதா?” என்றான்.
ஆத்மா தலையசைத்தான்.

” உங்கள் மனைவி இந்தப் பிரயாணத்தை மிகவும் ரசித்திருக்கிறார் என நினைக்கிறேன்” என்று நீச்சல் குளத்தில் அம்புபோல் குதித்த நித்யாவைப் பார்த்துச் சொன்னான். நித்யா தண்ணீரிலிருந்து தலை தூக்கி ”ஆத்மா, நீயும் வாயேன்” என்றாள்.

ஆத்மா தலையசைத்தான்.

மெலிதான கடல் காற்று அவன் கேசங்களை அலைக்கழித்தது. அவனுள் இன்பம் பொங்கியது.

” எப்போது சென்னைக்குப் போய்ச் சேருவோம்?”

” இன்னும் பதின்மூன்று நிமிஷங்களில்…”

எதிரே பார்த்தான். சூரியன் ஜரிகையிட்ட கடல் சோம்பேறித்தனமான ஆரஞ்சுப் படுதாவைப் போலப் புரண்டுகொண்டு இருந் தது. வெண்பறவைகள் சீராகப் பறந்துகொண்டு இருந்தன. ஓசோன் வாசனை ஆத்மாவுக்குப் பிடித்திருந்தது. ஒலிபெருக்கி உயிர் பெற்றது.

” கவனியுங்கள்.. அன்புள்ள பிரயாணிகளே! கவனியுங்கள்! மகிழ்ச்சிப் பகுதியில் ஆனந்தப் படகில் சென்னை நகரத்தைக் காண வந்திருக்கும் உங்களுக்குப் படகின் தலைவருடைய வணக்கங்கள். இந்தப் படகு உங்கள் சொந்தப் படகு. இதில் கிடைக்கா தது எதுவும் இல்லை. நவீன விஞ்ஞானத்தின் நவீன அதிசயம் இது. ஐந்நூறு கிலோ மீட்டர் வேகத்தில் நாம் சென்றுகொண்டு இருக்கிறோம். இந்தப் படகுகடல் மேல், கடலுக்குள், ஏன் மணல்மேல்கூடச் செல்லக்கூடியது…

” சென்னை நகரின் பல பகுதிகளைக் காண இன்று வந்திருக்கும் உங்களுக்குச் சென்னையைப் பற்றிய அறிமுகம் தேவை என்றால் உங்களுக்கு அருகிலேயே இருக்கும் ஒலிப்பெட்டியை இணைத்துக் கொள்ளலாம்… வந்தனம்.”
ஆத்மா சென்னை நகரைப் பற்றி முழுதும் படித்துவிட்டான். இருந்தும் மறுபடியும் மறுபடியும் தன் நகரத்தைப் பற்றிக் கேட்க அவனிடத்தில் ஆவல் மிச்சம் இருந்தது.

ஒலிப்பெட்டியை இணைத்துக்கொண்டான். மெலிதான வற்புறுத்தும் குரலில் சங்கீதப் பின்னணியுடன் அது அவன் காதுகளுக்குள் மட்டும் ஒலித்தது.

'தென்னிந்தியாவின் மகத்தான நகரமாக இருந்த சென்னை அல்லது மதறாஸ் தார்மல அய்யப்ப நாயக்கன் என்பவர் 1639-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதி ஃப்ரான்ஸிஸ்டே என்பவருக்கு செயின்ட் ஜார்ஜ் கோட்டையைக் கட்டுவதற்கு அனுமதி தந்ததற்கு முன்னமேயே இருந்திருந்தாலும், அதன் சரித்திரம் அப்போதுதான் தொடங்குகிறது…

" டே என்பவர் ஒரு தொழிற்சாலை அமைப்பதற்காக இருபத்தைந்து ஐரோப்பியச் சிப்பாய்களுடனும் நாகபட்டன் என்கிற இந்திய வெடிமருந்து தயாரிப்பவருடனும் 1640-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 20-ம் தேதி அங்கே வந்து சேர்ந்தார். செயின்ட் ஜார்ஜ் கோட்டையின் உட்பகுதி 1640-ம் ஆண்டு ஏப்ரல் 23-ம் தேதி முடிவுற்றது…"

நித்யா தன்னைத் துடைத்துக்கொண்டு வந்து அவன் காது அருகில் முகத்தோடு முகம் ஒட்டிக்கொண்டு அவன் என்ன கேட்கிறான் என்பது மாதிரிப் பார்த்தாள்.
" மதறாஸ் பட்டணம் என்பதுதான் அதன் பழைய பெயர். இந்தப் பெயரின் ஆதாரம் சரிவரத் தெரியவில்லை. மத்த ராஜு என்று அந்தப் பகுதியின் அரசன் ஒருவன் பெயரிலிருந்து ஏற்பட்டு இருக்கலாம்… அல்லது கடலில் சென்ற மரக்கால் ராயர்கள் என்கிற ஓர் இனத்தின் பெயரிலிருந்து மரக்கால் ராயர் பட்டணம் என்று தொடங்கி மதறாஸ் பட்டணம் என்று மாறி இருக்க லாம்…"
நித்யா அவனைச் சீண்டினாள்… ஆத்மா ஒலிப்பெட்டியைக் குறைத்தான்.
" எத்தனை தடவை இந்தச் சென்னைச் சரித்திரத்தையே கேட்டுக்கொண்டு இருப்பாய்? எனக்கு அலுத்துவிட்டது!"

" இது நம் நகரம் நித்யா! நம் வீட்டுக்குப் போகப்போகிறோம்!"

" உங்கள் முன்னோர் வீட்டில் என்ன பார்க்கப் போகிறாய்? பிற்காலத்தில் மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின் இந்தச் சந்ததியில் ஆத்மா என்று ஒருவன் பிறக்கப்போகிறான் என்று சுவரில் எழுதி வைத்திருப்பார்களா?"

" முதலில் அந்த வீட்டைக்கண்டு பிடிப்பதே கடினமாக இருக்கும்! எந்த நிலையில் இருக்கிறதோ… பெரும்பாலான கட்டடங்கள் பத்திரமாக அன்று இருந்தது போலவே இருக்கின்றனவாம்… அந்த வழிகாட்டி உன்னை விசாரித்தான்…"

" ஆம். அவன் என்னைப் பார்த்துக்கொண்டே இருந்தான்."

" அது உனக்கு எப்படித் தெரியும்?"

" நான் பார்த்த திசையில் எல்லாம் அவன் தெரிந்தான்."

" மார்பை மூடிக்கொள், ஜலதோஷம் பிடித்துக்கொள்ளும்."
" எனக்குப் பசிக்கிறது."

" கீழே சென்று ஏதாவது சாப்பிடு. நான் கேட்டுவிட்டு வருகிறேன். ஐந்து நிமிஷங்களில் வந்துவிடு… சென்னை வந்துவிடும்."

ஆத்மா மறுபடியும் ஒலிப்பெட்டியை இணைத்துக்கொண்டான்.

" மைலாப்பூரில் லாஸரஸ் தேவாலயத்துக்கு அஸ்திவாரம் தோண்டும்போது மான்யுவல் மத்ரா என்பவரின் கல்லறைதென் பட்டதாம். மத்ராவின் குடும்பம் ஒரு பெரிய செல்வாக்குள்ள குடும்பம். எனவே நகரத்தின் பெயர் மத்ராவின் பெயரிலிருந்து வந்திருக்கலாம் என நினைக்கலாம்…

மதர்ஸா என்பதற்குப் பெர்சிய மொழியில் பள்ளிக்கூடம் அல்லது கல்லூரி என்று அர்த்தம். ஒரு பழைய முகம்மதியக் கல்லூரி அங்கு இருந்திருக்கலாம். இதிலிருந்து மதறாஸ் என்ற பெயர் தோன்றி இருக்கலாம் எனவும் எண்ணக்கூடும்.

எனினும், சென்னைப் பட்டணம் என்ற பெயரே பிற்பாடு நிலைத்து சென்னை என்று மாறியது. இந்தப் பெயரைப் பற்றிச் சந்தேகம் இல்லை. தார்மல சகோதரர்களின் தந்தை சென்னப்ப நாயக்கரின் நினைவில் சென்னப் பட்டணம் என்று பெயர் பெற்று, சென்னை ஆயிற்று…"

அவர்கள் ஒவ்வொருவராகப் படகின் மேல் அடுக்குக்கு வந்து கொண்டு இருந்தார்கள்…சென்னையை நெருங்கிக்கொண்டு இருக்கிறோம்! ஆத்மாவின் உள்ளம் துடித்தது… தன் அன்னையை நோக்கிப் போவது போல உணர்தான். எத்தனை தூரம் வந்திருக்கிறான். இந்தப் பிரயாணத்துக்காக..! அஸ்ட்ரா 7-ல் அவனுக்கு விடுமுறை கிடைத்து, நித்யா வுக்கு விடுமுறை கிடைத்து, அங்கிருந்து ஷட்டில் பிடித்து ஸ்பேஸ் நிலையத்துக்கு வந்து அங்கே ரிசர்வேஷன் கிடைக்காமல் அந்தரத்தில் தொங்கும் அந்த பிளாட்ஃபாரத்தில் இரண்டு தினங்கள் கழித்து இடம் கிடைத்து, கிரகப் பிரயாணக் கப்பலில் பூமிக்கு வந்து… மற்றொரு பூமிப் பிரயாணம் செய்து… ஒரு வாரமாக ஓட்டல்கள், பழக்கம் இல்லாத பிரயாணங்கள், பழக்கம் இல்லாத அறைகள்… முகங்கள்…

" ஏன்தான் உனக்கு இந்தப் பிடிவாதமோ! விடுமுறையை வீணடிக்கிறாய். எத்தனையோ புதிய இடங்களுக்குச் சென்று இருக்கலாம்… ஹீலியாஸ் என்கிற புதிய காலனி அப்படித் தேவலோகம் போல இருக்கிறதாம். நீயும் உன் சென்னையும்! சரித்திரத்தைக் கட்டிக்கொண்டு அழு!"

" உனக்கு இஷ்டம் இல்லை என்றால் நீ தனியாகப் போயிருக்கலாமே நித்யா!"
" ஆம், தெரியாத்தனமாகத்தான் வந்துவிட்டேன். பூமியே போர் அடிக்கிறது."
சென்னை கண்டுபிடிக்கப்பட்ட செய்தி அஸ்ட்ராவில் கிடைத்தது முதலே அவனுக்கு இருப்புக்கொள்ளவில்லை. அதற்காகப் பணம் சேர்த்து, விடுமுறை சேர்த்து… வந்து சேர்ந்துவிட்டான்.

வழிகாட்டி தென்பட்டான். அத்மா அவனைக் கூப்பிட அவன் புன்சிரிப்புடன் வந்தான்.

" நீ சென்னை நகரைப் பார்த்திருக்கிறாய் அல்லவா?"

" தினம் ஒரு தடவை… அதுதானே என் தொழில்."

" நகரின் பல பகுதிகளும் உனக்குத் தெரியுமல்லவா?" அவன் சிரித்து. "ஹைகோர்ட், சாந்தோம், அண்ணாசாலை, வள்ளுவர் கோட்டம், கபாலீஸ்வரர் கோயில், கந்தசாமி கோயில், கோட்டை…என்ன வேண்டும் உங்களுக்கு..?"

" திருவல்லிக்கேணி தெரியுமா?"

" பார்த்தசாரதி சாமி கோயில் இருக்கிறது.. மூன்றாவது குழுவில் சேர்த்துக்கொள்வார்கள்…"

" அங்கே தேரடித் தெருவில் ஒரு வீடு…"

" வீடா!" என்றான் ஆச்சர்யத்துடன்.

" ஏன்!"

அவன் பதில் சொல்வதற்கு முன் ஒரு சைரன் ஒலித்தது. "கவனியுங்கள்… கவனியுங்கள்…படகின் மேல் ஓரங்களிலிருந்து விலகிக்கொள்ளுங்கள்… விலகிக்கொள்ளுங்கள்… படகு மூடிக்கொள்கிறது…"

மேல் தளத்தில் இருந்த அனைவரும் நடுவே சேர்ந்துகொண்டார்கள். ம்ம்ம்ம் என்று இயந்திர முனகல் கேட்க ஒரு பிளாஸ்டிக் கண்ணாடிச் சுவர் அரைச் சதுர வில்லையாக உயர்ந்து வளைந்து படகின் மேல் தளத்தை முழுவதும் மூடிக்கொண்டது… திடீரென மௌனமும் எதிர்பார்ப்பும் அவர்களிடையே பரவியது.

" கவனியுங்கள்! கவனியுங்கள்! படகு கடலுக்குள் செல்லப்போகிறது, இன்னும் மூன்று நிமிடங்களில் நாம் சென்னை நகரை அடையப் போகிறோம்… இருபத்து ஒன்றாம் நூற்றாண்டின் இறுதியில் கடலில் மூழ்கிய சென்னை நகரத்தின் புராதனக் கட்டடங்கள் நவீன ரசாயனத்தின் உதவியால் பாசி நீக்கப்பட்டு. மாசு நீக்கப்பட்டுச் சுத்தப்படுத்தப்பட்டு… உங்களுக்காகக் காத்திருக்கிறது… உங்கள் படகு அமிழ்ந்து சென்னை நகரின் புராதன வீதிகளின் ஊடே செல்லும்… அவ்வப்போது கட்டடங்களின் வருணனை கிடைக்கும். நாம் இன்னும் இரண்டு நிமிஷங்களில் செயின்ட் ஜார்ஜ் கோட்டையை அணுகுவோம்..!"
அந்தப் படகு நீரில் அமிழ்ந்தது.

கடல் இப்போது வெள்ளி ஜரிகையிட்டு மெதுவாகப் புரண்டு… மிக அமைதியாகவே இருந்தது.

## சேச்சா - சுஜாதா

ஆர்.சேஷாத்ரிநாதன் என்ற பெயர் எஸ்.எஸ்.எல்.சி. புத்தகத்திலும் பாஸ் போர்ட்டிலும் தான்பயன்படுத்தப்பட்டது. அனைவரும் அவனை சேச்சா என்றுதான் அழைப்போம். சிலசமயம்ராமானுஜு, சிலசமயம் எல்.பி.டபிள்யு என்று கூப்பிடுவோம். காரணம்1, கணக்கில் மிககெட்டிக்காரன்.
2: எப்போதாவது எங்களுடன் கிரிக்கெட் ஆட வரும்போது எல்.பி.டபிள்யுகொடுத்தால் ஒப்புக்கொள்ள மாட்டான். என் வாழ்க்கையும் அவன் வாழ்க்கையும் மூன்று முறைகுறுக்கிட்டன. ஸ்ரீரங்கத்தில் ஒன்றாகப் படித்தோம். நான் சௌரிராஜ ஐயங்கார் செக்ஷன். அவன்கே.என்.ஆர். செக்ஷன். அப்போதே அவனிடம் ஏழ்மையின் அடையாளங்கள் தெரிந்தன. ஒரேசட்டையை நனைத்து உலர்த்தி அணிவதால், கிட்ட வந்தால் ஒருவித முடை நாற்றம் வீசும்.காலுக்குச் செருப்பில்லாமல் சித்திரை மாதத்து வெயிலில் நிழலோரமாக பதியப் பதிய நடந்துசெல்வான். தீபாவளிக்கு நாலைந்து ஓலைப்பட்டாசும் ஒரே ஒரு கம்பி வாணமும் சுட்டுவிட்டு,நாங்கள் வெடிப்பதைக் கண்ணியமாகப் பார்த்துக்கொண்டு இருப்பான்.

சேச்சாவின் வீடு கீழச்சித்திரை வீதியில் எங்கள் வீட்டுக்கு எதிர் சாரியில் சவுகார் வீட்டுக்கும்சிரஸ்தார் ராமுவின் வீட்டுக்கும் இடையே புத்தகத்தில் அடையாளம் செருகினாற் போல ஒருகூரை வீடு. அதன் வாசலில் அதிர்ஷ்டவச முனிசிபல் விளக்கின் வெளிச்சத்தில்தான் பாடம்படிப்பான். சேச்சா பிறந்த நான்காம் மாதம் அவள் தாய் விதவையானவள். அவன் தந்தை ரங்கசாமிஐயங்கார் பொன்மலை ரயில்வே ரிப்பேர் தொழிற்சாலையில் அக்கவுண்ட்ஸில் இருந்தவர்.படக்கென்று ஒருநாள் போய்விட்டார். ஃபேமிலி பென்ஷன் ஒன்றுதான் வருமானம். அதில்சிக்கனமாகக் குடித்தனம் செய்தாலும் மாசக் கடைசியில் பாட்டியிடம் காபிப்பொடி கடன் கேட்கவருவாள். சிவப்பான உடம்பு. விதவைகளுக்கென்று ஏற்பட்ட காவி கலர் புடவை,ரவிக்கையில்லாமல் போர்த்திக்கொண்டு, நெற்றியில் லேசாக சூர்ணம் அணிந்துகொண்டுபாட்டியுடன் தகாத இளமையில் தொண்டரடிப்பொடி ஆழ்வார் சந்நிதிக்கு பகவத் விஷயம்உபன்யாசம் கேட்கச் செல்வாள். அவள் வாழ்க்கை முழுவதுமே சேச்சாவைச் சுற்றி இயங்கியது.சேச்சா பள்ளியிலிருந்து வரக் கால் மணி தாமதமானாலும் பதறிப் போய்விடுவாள். கோட்டைக்குப்போனால் வீட்டுக்கு வரும் வரை வாசலையே பார்த்துக் கொண்டு இருப்பாள். என்னை எப்போது பார்த்தாலும் 'நன்னா படிக்கிறயா' என்று விசாரிப்பாள். தினம் சிறிய வெண்கலச் செம்பு எடுத்துக்கொண்டு காவேரிக்குப் போய் அதிகாலையில் ஈரப் புடவையுடன் வருவாள். பாட்டியிடம்அஞ்சு பத்து கைமாத்தாக வாங்க வரும்போது "சேச்சா படிச்சு முன்னுக்கு வந்துட்டா என் கஷ்டம்எல்லாம் தீர்ந்துடும் மாமி."

"அவனுக்கென்னடி செல்லம், எட்டூருக்குப் படிப்பான்."
"நன்னாத்தான் படிக்கிறான் மாமி. ஆனா, எதுத்து எதுத்துப் பேசறான். அரிசி உப்புமாநன்னால்லைன்னு அன்னிக்குப் பாருங்கோ தட்டத்தை வீசி எறிஞ்சான். தோசை வேணுமாம்.உளுந்துக்கும் புழுங்கரிசிக்கும் எங்கே போவேன்?"
"நான் கேக்கட்டுமா?"
"வேண்டாம்... வேண்டாம். திருப்பதிப் பெருமாளுக்கு முடிஞ்சு வெச்சிருந்ததை எடுத்து தெற்குவாசல்ல போய் கிருஷ்ணா கபேல வாங்கிச் சாப்ட்டுக்கோன்னு அனுப்பிச்சேன்."

சேச்சா படிப்பைப் பற்றிய கவலை அந்தத் தாய்க்கு இல்லை. நான்காம் வகுப்பிலிருந்து பள்ளிஇறுதிவரையில் பள்ளியில் உள்ள அத்தனை ஸ்காலர்ஷிப் ஃப்ரீஷிப்புகளையும் அவன் பெற்றான். ஆண்டுவிழாவில் படிப்பு சம்பந்தமான அத்தனை கோப்பைகளையும் அத்தனை டிரஸ்ட் பரிசுகளையும்ஆர்.சேஷாத்ரி, ஆர்.சேஷாத்ரி என்று மைக்கில் சொல்லி அலுத்து, ஸ்டேஜ் ஓரத்திலேயே அவனைநின்றுகொள்ளச் சொல்வார்கள். அடுத்தடுத்துப் பரிசு வாங்கி வகுப்பில் முதல், பள்ளியில் முதல்,கல்லூரியில் முதல், மாகாணத்தில் முதல் என்று வரிசையாக அத்தனை முதல்களையும்கவர்ந்துவிட,
"உன் பிள்ளைக்கு என்னடி குறை, கலெக்டர் பரீட்சை எழுதச் சொல்லு, எட்டூருக்குகலெக்டராவான்" என்றாள் பாட்டி.

"அதெல்லாம் வேண்டாம் மாமி. அவனை வெளிய எல்லாம் அனுப்பறதா இல்லை. பேசாமகோல்டன் ராக்லயே அவா அப்பா ஆபீஸ்லயே வேலை போட்டுக் கொடுப்பாளாம். அப்ரண்டிஸ் மனுபோட்டிருக்கான். கெடைச்சுட்டா மேல அடையவளைஞ்சான்ல மு

றைப் பொண்ணுகாத்துண்டிருக்கு. நப்பின்னைன்னு நம் குடும்பத்துக்கு அனுசரணை யான, அடக்கமான பொண்ணு.கல்யாணத்தைப் பண்ணிடலாம்னு இருக்கேன் வர சித் திரைக்குள்ள."

சேச்சா ஃபார்வர்டு கம்யூனிட்டியாக இருந்தாலும் இன்ஜினீயரிங், மெடிக்கல் இரண்டு ஸீட்டும்கொடுத்தே ஆக வேண்டியிருந்தது அவனுக்கு. என்ன படித்தான், எப்படி எதைத் தேர்ந்தெடுத்தான்என்று தெரியுமுன் எங்கள் குடும்பத்தில் மாறுதல்கள் ஏற்பட்டு, ஸ்ரீரங் கத்தைவிட்டு வெளியே வந்து,என் கவலைகள் திசை திரும்பிவிட்டதால் தொடர்பு விட் டுப்போய் பல வருஷங்கள் இடைப்பட்டு,நான் டெல்லிக்கு சிவில் ஏவியேஷனில் சேர்ந் து மாற்றலாகி மாற்றலாகி அலகாபாத், கல்கத்தா,பம்பாய் என்று பல ஊர்களில் வே லை பார்த்து சில ஆண்டுகளுக்குப் பிறகு சென்னையில் போஸ்டிங்ஆனபோது, ஒரு மு றை கன்ட்ரோல் டவரில் போன் வந்திருப்பதாகச் சொன்னார்கள். போய்க்கேட்டால், "ஞாபகமிருக்கிறதா ரங்கா? நாதன் பேசறேன்."

"எந்த நாதன்?"

"சேஷாத்ரிநாதன், சேச்சா!"

"சேச்சா, வாட் எ சர்ப்ரைஸ்... இப்ப எங்க இருக்கே? அம்மா எல்லாம் சௌக்கியமா? உ ன்னையாருக்கும் 'நாதன்'னு தெரியாதே. ஸாரி, என்ன படிச்சே? இன்ஜினீயரிங்கா, மெடி க்கலா,ஐ.ஏ.எஸ்ஸா?"

"அதெல்லாம் இல்லைப்பா. ஐ.ம் எ டீச்சர். அம்மாவையும் திருச்சியையும் விட்டுட்டு வர முடியாதுன்னு பி.எஸ்ஸி., ஆனர்ஸ் சேர்ந்தேன். பிஸிக்ஸ் எடுத்துண்டேன். இப்ப அசி ஸ்டென்ட்புரொபஸர் ஆஃப் பிஸிக்ஸ்" என்று நகரத்தின் பிரசித்தி பெற்ற இயேசு சபைக் கல்லூரியின் பெயர்சொல்லி, குவார்ட்டர்ஸில் இருப்பதாகவும் அம்மா என்னைப் பார்க் க விரும்புவதாகவும்சொன்னான்.

"கல்யாணமாய்டுத்தா?"

"ஆச்சு, அம்மாவுக்காக" என்றான்.

அடுத்த ஞாயிறு அவன் வீட்டுக்குச் சென்றபோது கோடம்பாக்கத்தில், அந்தக் கல்லூரி வளாகத்தில்காற்றோட்டமாக குவார்ட்டர்ஸ் கொடுத்திருந்தார்கள். சேச்சாவின் வாழ்க் கைத் தரத்தில்முன்னேற்றம் இருப்பது சந்தோஷமாக இருந்தது. தெரு விளக்குக்குப் ப தில் சற்று அதிகப்படியாகவேகுழல் விளக்குகள்! கட்டில், காத்ரெஜ் அலமாரி, பதினாலு இன்ச் டி.வி. நல்ல வீடு, அழகானமனைவி. செல்லம்மாள் அப்படியே இருந்தாள். மரும களைப் பெண் போல அழைத்தாள். நப்பின்னைகர்ப்பமாக இருப்பது தெரிந்தது. கையில் மூன்று வயசுக் குழந்தை பெயர் ரங்கநாதன் அவ்வப்போதுகளுக் களுக் என்று சிரித்து க்கொண்டு இருக்க, சேச்சாவின் டேப் ரெக்கார்டரில் மாலியின் குழலிசைஒலிக்க, ஏ தோ ஒருவிதத்தில் நியாயம் நடந்துவிட்டதாகத் தோன்றியது. வெண்ணெயும்வெல்ல மும் வைத்து அடை சாப்பிட்டபோது,
"இந்த மாதிரியெல்லாம் டிபன் சௌகரியங்கள்இருக்குன்னா கல்யாணம் பண்ணிக்க லாம் போலத்தான் இருக்கு மாமி" என்றேன். நப்பின்னைகளங்கமில்லாமல் கன்னம் சி வந்தாள்.

"ஏன்டாப்பா, நீயும் பண்ணிக்க வேண்டியதுதானே?"

"அதுக்கென்ன மாமி, வத்சலாவுக்கு ஆகட்டும் முதல்ல" என்றேன்.

"இப்ப ஊம்னு சொன்னா நப்பின்னை தங்கையே பெருந்தேவின்னு இருக்கா."

"பேரை மாத்திண்டுட்டா சித்ரான்னு" என்றாள் நப்பின்னை.

சேச்சாவுக்கு காலேஜில் மிகப் பெரிய பெயர் என்றும், ஒரு ஃபோர்டு ஃபவுண்டேஷன் கி ராண்ட்டில்அவனுக்கு மூன்று வருஷம் டாக்டரேட் படிக்கத் தாராளமான உபகாரச் சம்ப ளத்துடன் அமெரிக்காபோகச் சந்தர்ப்பம் கிடைத்திருப்பதும் தெரிந்தது.

"எப்ப போறே?"

"எப்படி அம்மாவையும் இவளையும் விட்டுட்டுப் போறது?"

செல்லம்மாள்தான் சொன்னாள்,
"நான் பார்த்துக்கறேன். எனக்குத் தைரியம் வந்துடுத்து. போய்ட்டுவாடான்னு சொன்னா கேக்க மாட்டேங்கறான். அது பெரிய பிரக்யாதி இல்லையா ரங்கு? இந்தமாதிரி இண்டியாவிலேயே ஒருத்தருக்குத்தான் கிடைச்சிருக்காம். போய்ட்டு வாடான்னா..."
"சேச்சா, ஒண்ணு பண்ணேன். அங்கேயே முயற்சி செய்தா வேலை கிடைச்சுடும். அம்மாவையும்ஃபேமிலியையும் அழைச்சுண்டு போய்டலாமே" என்றேன்.

"அப்படி ஒரு சாத்தியம் இருக்கா என்ன?"

"உனக்கு இருக்கிற புத்திசாலித்தனத்துக்கும் திறமைக்கும் நிச்சயம் அந்த யூனிவர்சிட்டிலயேவேலை கொடுப்பான் தெரியுமா?"

"அதான் சொல்றேன், நீங்க போய்ட்டு வாங்கோ. நான் அம்மாவோட என் தம்பி நச்சு வந்துஇருக்கேன்கிறான். அக்கம் பக்கத்தில் எல்லாம் ரொம்ப அனுசரணையா இருக்கா. தனியா இந்தகேம்பஸ்ல இருக்கிறதுல கஷ்டமே இல்லை. வருஷம் ஒரு தடவை வரலாம். போக வர சார்ஜுகொடுக்கறாளாம்."

"எனக்கென்னவோ இந்த ஆஃபரை விட வேணாம்னு தோண்றது சேச்சா" என்றேன்.

சேச்சா அலட்சியமாகப் பேசினான்.

"அமெரிக்கா போனா முதல்ல சூட்டெல்லாம் போட்டுக்கணுமேப்பா."

"இவரை ஒரு தடவைகூட நான் சூட்டு போட்டுப் பாத்ததில்லை" என்றாள் நப்பின்னை. "காலேஜுக்கும் வேஷ்டிதான். பேன்ட்கூடப் போட்டுக்க மாட்டார்!"

"கல்யாணத்துல போட்டுக்கலை?"

"கல்யாணத்திலயும் வேஷ்டிதான்; காலேஜுக்கும் வேஷ்டிதான்! போட்டுக்க மாட்டேங்கறார்.சொல்லுங்கோ நீங்க" என்றாள் நப்பின்னை.

"அடுத்த வருஷத்தில் இருந்து கிளாசுக்கு பஞ்சகச்சம் கட்டிண்டு குடுமியோட போலாம்னுஇருக்கேன்."

"பையன்கள்லாம் கலாட்டா பண்ண மாட்டாங்களா?"

"இல்லப்பா, லெக்சர் இன்ட்ரஸ்டிங்கா இருக்கிறதால தே டோன்ட் மைண்ட்" என்றான். கொஞ்சம்கூடப் பெருமை சேர்க்காமல் சரளமாக இதைச் சொன்னான்.

"அமெரிக்கா போறதுக்கு சூட்டு போட்டுண்டுதான் ஆகணும்னு கட்டாயம் இல்லை மாமி" என்றேன்.

"இருந்தாலும் சின்னதிலேர்ந்து எனக்கு ஆசை. இவனுக்கு சூட்டு போட்டுப் பார்க்கணும்னு. இவப்பாகல்யாணத்துக்குத் தெச்சது. நல்ல அல்பாக்கா சூட்டு. அந்துப்பூச்சி கடிச்சுடுத்து. சின்னவங்களுக்குஆசை இருக்காதா என்ன? என்னவோ இப்பவே சன்யாசியாய்ட்ட மாதிரி."

"அதெல்லாம் இல்லை" என்று சிரித்தான் சேச்சா.

சேச்சா அமெரிக்கா போனானா என்பதைத் தெரிந்துகொள்ளும் முன் என்னைத் தற்காலிகமாகஹைதராபாத் பேகம்பேட்டைக்கு மாற்றிவிட்டதால், நான்கு மாதம் கடந்து திரும்பினதும்தான்அந்தக் கல்லூரிக்கு போன் செய்து கேட்டதில் அவன் அமெரிக்காவுக்குப் போய்விட்டதாகத்தெரிந்தது. அடுத்து சேச்சா நிச்சயம் அங்கே பிரபலமாகி அந்த மேல்நாட்டு சூழ்நிலையில்எதையாவது புதுசாகக் கண்டுபிடித்தான் என்ற செய்தியை எதிர்பார்த்தேன்.
அடுத்த முறை சேச்சாவின் வாழ்க்கையும் என் வாழ்க்கையும் குறுக்கிட்டது ஒரு விநோதமானசந்தர்ப்பத்தில். மீனம்பாக்கம் சர்வதேச விமான நிலையத்தில் ஏர் இந்தியாவின் நேரடி விமானம்லண்டன், நியூயார்க்கிலிருந்து வந்து நின்றுகொண்டு இருந்தது. அப்போது நான் ஏட்டிஸி டியூட்டியில்இருந்தேன். இன்ஸ்பெக்ஷனுக்காக எங்கள் மேலதிகாரி ஒருவர் வருகிறார் என்று அரைவல்லவுஞ்சுக்குச் சென்றபோது கேவி என்னைப் பார்த்தான். அவனுடன் சேச்சாவின் மச்சினன் நச்சுவும்ஏராளமான கல்லூரி மாணவர்களும் பிளாஸ்டிக் நாற்காலிகளில் காத்திருந்தார்கள். என்னைஅவசரமாகக் கூப்பிட்டு

கேவி,
"உனக்கு கஸ்டம்ஸ்ல யாரையாவது தெரியுமா?ஏரோட்ரோம்லதானே வேலையா இருக்கே?"

"ஆமாம், என்ன வேணும்?"

"ஒரு கன்ஸைன்மென்ட்டைக் கிளியர் பண்ணணும்."

"இதுதான் நச்சு, சேச்சாவோட மச்சினன்."

"சேச்சா, இந்த ஃப்ளைட்ல வரானா?"

"ஆமாம்" அவன் கண்கள் கலங்கியிருந்ததை முதலில் கவ னித்தேன்.

"என்ன கேவி, எதாவது உடம்பு கிடம்பு சரியில்லையா?"

"இந்த ஃப்ளைட்ல சேச்சா வோட பாடி வருது!"

"ஐயோ, என்ன ஆச்சு?" என்றேன் பதறிப் போய்.

"அமெரிக்காவில் எங்கயோ இடம் தெரியாம நியூயார்க்ல சுத்தப் போயிருக்கான். கைல டாலர்அதிகம் இல்லையாம். பட்டப் பகல்ல, அதென்ன சொல்வா, 'மகிங்'காம் அவன்கிட்ட டாலர்இல்லைன்னு மண்டைல அடிச் சிருக்கான். அடி பலமா பட்டதுல செத்துப் போயிட்டானாம்."

"மை காட்."

கார்கோ ஹோல்டிலிருந்து மெள்ள அந்தப் பெட்டி இறங்குவதைப் பார்த்தேன். எதிரே இடிந்துபோய்சேச்சாவின் அம்மாவும் நப்பின்னையும் உட்கார்ந்திருக்க, நிறைக் கர்ப்பமாக இருந்தாள். குழந்தைதாயின் மயிரைப் பிடித்து, இழுத்து விளையாடிக்கொண்டு இருந்தது. அடிக்கடி தாயின் கண்ணீர்புரியாமல் முகத்தைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டு இருந்தது.

நான் "செல்லம் மாமி! என்னாச்சு?"

அந்த இடத்து இரைச்சலில் அவள் அழுதது பெரிசாக யாருக்கும் கேட்கவில்லை. யாரோ வெளிநாடுசென்று திரும்பும் தலைவருக்கு மலர் மாலைகள் தொடர்ச்சியாக அணிவிக்கப்பட்டபோது, கரகோஷஆரவாரம் அவள் அழுகையைப் புதைத்தது.

மெள்ள மெள்ள அந்தப் பெட்டி இறங்க நான் கஸ்டம்ஸில் ராசரத்தினத்திடமும் ஏர்போர்ட் ஹெல்த்ஆபீஸர் சங்கரமூர்த்தியிடமும் சொல்லி, ஃபர்மாலிட்டிகள் அனைத்தையும் சுருக்கி ஏர் இண்டியாமேனேஜரிடமும் சொல்லி விரைவிலேயே பெட்டியை விடுவித்து அவர்களுக்கு என்னால் ஆனஉதவி செய்து தந்தபோது, அந்தப் பெரிய பெட்டி நம் ஊர் ஆம்புலன்சுக் குள் நுழையாமல்வெளியேநீட்டிக் கொண்டிருக்க, பேருக்குப் பேர் ஆணை பிறப்பித்துக்கொண்டு இருந்தார்கள். நான்சேச்சா எதற்காகப் பிறந்தான். எதற்காக அத்தனை திறமையாகப் படித்து, எதற்காக அமெரிக்காசென்று நியூயார்க் நகர வீதியில் விரயமாக ரத்தம் சிந்திச் செத்தான் என்பதை யோசிக்கையில்,அப்போதே மலர் வளையங்களை வைக்கலாமா, வளாகத்துக்குச் சென்றதுமா என்பதைவிவாதித்தார்கள்.

"க்ரீன் கார்டு கெடைச்சதும் எல்லாருமா சேர்ந்து அமெரிக்கா போலாம்னு எழுதியிருந்தானே... நான்என்ன பாவம் செய்தேன்? இப்படிக் கண்காணாத தேசத்தில் சேச்சா... சேச்சா... இப்படிப்பண்ணிட்டியேடா!"

"தெருவில் அடிபட்டுச் சாகணும்னு என்ன நியா யம் இது!" நப்பின்னை புழுதித் தலையும் திறந்தமார்புமாகப் பார்த்துக்கொண்டு இருந்தாள்.

அந்தப் பெட்டி மிகத் திறமையாக பேக் செய்யப்பட்டு இருந்தது. அதை எப்படி, எந்தஉபகரணங்களைக்கொண்டு திறக்கலாம் என்பதற்குக் குறிப்புகள் ஒரு காகிதத்தில் பாலிதீன் பையில்வைக்கப்பட்டு இருந்தது. அதற்கான டூல்சும் சேர்ந்து, மார்ட்டின் அண்டு கம்பெனி எம்பாமர்ஸ்அண்டு ஃப்யுனரல் டிரக்டரஸ்' என்று கார்டு வைத்திருந்தது. முதலில் அலுமினியப் பெட்டி. அதைத்திறந்ததும் உள்ளே பளபளவென்று பாலிஷ் போட்டு தேக்கு மரப் பெட்டி. அதில் எங்கள் முகங்கள்தெரிந்தன. அதை சீலைப் பிரித்து மூடியை நெ

ம்புவதற்கு கார்பென்ட்டரைக் கூட்டி வரவேண்டியிருந்தது. நச்சுதான் சொன்னான், "அங்க இருக்கிற இண்டியன் அசோசியேஷன்லஇன்டர்நெட் மூலம் காண்டாக்ட் பண்ணி அவாள்லாம் ஒரே நாள்ல பணம் சேர்த்து முழுச்செலவையும் ஏத்துண்டாளாம்."

"என்ன அருமையா பேக் பண்ணிருக்கான் பாருங்கோ, அமெரிக்கா அமெரிக்காதான்."

பெட்டியைத் திறந்ததும் லேசாக ரோஜா வாசனை வீச, சேச்சா வெல்வெட் மெத்தையில்படுத்திருந்தான்.

"வாடி, வந்து பாரு. உன் புருஷனை சூட்டு போட்டுண்டு பார்க்கணும்னியே, பாரு!"

நான் அதிர்ச்சியுற்று சேச்சாவின் முழு உடலையும் அப்போதுதான் பார்த்தேன். அவன் உடலில்உள்ள கெட்ட திரவங்கள் நீக்கப்பட்டு, நல்ல கலராக இருந்தது. தேகமும் கைகளும் கன்னத்தில்லேசாக ருஜ் தடவப்பட்டு வாய் லேசா கச் சிரிப்பது போல் 'க்ளிப்' வைக்கப்பட்டு இருந்தது. தலைமயிர் மிக சுத்தமாகத் தழைய, படிய வாரப்பட்டு சேச்சா அற்புதமான சூட் அணிந்துகொண்டுஇருந்தான்.

# ஜோதியும் ரமணியும் – சுஜாதா

புதிய பெண் லெக்சரர், ரமணியை எப்படி சமாளிக்கப்போகிறாள் என்று கதி கலங்கிப் போனோம்.ரமணி என்று பெயர் இருந்தால் ஒருவன் எப்படி இருப்பான்? குழந்தை முகம், பெண்மை மிளிரும்தேக அமைப்புடன்தானே? தப்பு. இவன் மிலிட்டரி மீசையுடன் காட்டாகுஸ்தி பயில்வான் போலஇருந்தான். போதாமல் பலத்த குரல். யாரையாவது விளித்தால் ஹாஸ்டலே அதிரும்.சிரிக்கும்போது மட்டும் கண்களில் ரமணி தெரிவான். மற்றபடி காட்டான்.

ஒரு மாதம் லேட்டாகத்தான் சேர்ந்தான். முதலில் அவனை சர்வே கிளாசில் வெளியே ஹாஸ்டலைச் சுற்றி அளக்கும் பயிற்சியில் பார்த்தேன்.
''என் பேர் ரமணி. ஆட்டோமொபைல்இன்ஜினீயரிங்ல புதுசா சேர்ந்திருக்கேன். கை குடு' என்றான். குடுத்த கை வெல்லப்பாகு போல்பிசுபிசுவென்றிருந்தது. நான் துடைத்துக் கொள்ள,
''கொஞ்சம் பிடிச்சுக்கோ'' என்று செயின்சர்வேக்கான சங்கிலியை என்னிடம் கொடுத்துவிட்டு நியூ ஆஸ்டலின் மூலையில் திரும்பி அங்கேரத்தன்லாலிடம் எனக்குத் தெரியாமல் மறுமுனையைக் கொடுத்துவிட்டு வேறுவழியாககாண்டீனுக்கு போய்விட்டான். இருவரும் பேந்தா மாதிரி ஒரு மணி நேரமாகசெயினைப் பிடித்துக்கொண்டு நிற்கிறோம். 'என்னடா' என்று பட்டூஸ் என்கிற பட்டாபிராமன் விசாரித்ததில் ரமணிஅந்தப் பக்கம் இருக்கிறான். அளந்துகொண்டு இருக்கிறான் என்று இருவரும் சொல்ல,விசாரித்ததில் கேண்டீனில் பஜ்ஜி சாப்பிட்டுக் கொண்டு இருந்தான்.
''நானா! நீ வேற யாரையோசொல்ற! எனக்கு சர்வே கிளாஸே கிடையாதே!'' என்று சாது முகத்துடன் புளுகினதிலிருந்துஅவனைக் கண்டாலே நானும் ரத்தன்லாலும் ஒதுங்கினோம். அந்த சம்பவத்தின் அவமானம்கலைய மூன்று மாதமாயிற்று.

ரமணி எப்போது யாரை எப்படிக் கவிழ்ப்பான் என்பது யாருக்கும் தெரியாது. சிறு நாடகங்களாடுவதுஅவனது இயற்கை. சின்ன விஷயத்துக்குக்கூட பொய் சொல்வான். மணி என்ன என்றால், அரைமணி கூட்டிச் சொல்வான். திங்கள்கிழமையை வியாழக்கிழமை என்பான். புதிய ஆட்களைச்சந்திக்கும்போது முத்தரையன், ரமணி ஐயர், அல்டாப் உசேன் என்று இஷ்டத்துக்கு பேர் மாற்றிச்சொல்வான். சொந்த ஊர் கேட்டால் ஒரு நாள் ஹைதராபாத், ஒரு நாள் சின்னாளம்பட்டி, ஒரு நாள்மொரிஷியஸ். நிஜப் பெயர் ரமணிதானா என்று எங்களுக்கு ரொம்ப நாள் சந்தேகமாக இருந்தது.

திடீர் என்று மொட்டை போட்டுக்கொள்வான். இட்லி விழுங்கும் போட்டியில் மற்ற பேர் பதினைந்துஇட்லியிலேயே தவித்துக்கொண்டு இருக்கையில் ரமணி லேட்டாக மெஸ்ஸுக்கு வந்துசேர்ந்துகொள்வான். நாற்பது இட்லி போடச் சொல்லி சாம்பாரில் குளிப்பாட்டி கவளம் கவளமாகஆக்கிக்கொண்டு கன்னங்களின் இடுக்கிலேயே வைத்துக்கொள்வான். போட்டிக்கான நேரம்தீர்ந்ததும் துப்பிவிட்டு இன்னும் இரண்டு இட்லி சாப்பிட்டுவிட்டு எழுந்து செல்வான். ஹாஸ்டல்தினத்தின்போது மார்க்கருடன் ராயபுரத்திலிருந்

து சாராயம் வாங்கி வந்து டென்னிஸ் கோர்ட்டில்நெற்றியில் கர்ச்சீப் கட்டிக்கொண்டு "மார்க்கர் வருத்தப்படாதே! சரோ வரேன்னு சொல்லிவிட்டுவரலை பாரு. அதான் ரொம்ப துக்கம். எனக்கு ஒரு தேவாங்கு மட்டும் வாங்கிக் கொடுத்துரு"

மார்க்கர், "கவலைப்படாதே தம்பி! சரோசா இல்லைன்னா சரசாவை இட்டாரேன்"

"எங்க இருக்கா சொல்லு" இவ்வாறு திரும்பத் திரும்ப உரத்த குரலில் அலம்பிக்கொண்டுஇருப்பார்கள். ஒரு பத்தி நாடகம் போல இருக்கும். பிறகு "மார்க்கர், இப்டியே போ, ரெண்டு லைட்டுதெரியுது பாரு. அதுக்கு மத்தியில் நடந்து போ" என்று அனுப்புவான். சற்று நேரத்தில் 'க்றீச்' என்றுப்ரேக் சப்தம் கேட்கும்.

"மார்க்கர் போய்ட்டான்டா"

"அவனா... அவன் ஏன் சாவறான். இன்னும் எவ்வளவு ஜிஞ்சர் அடிக்கணும் அவனுக்கு".

"ரமணி தேவாங்கு வளக்கப் போறியா?"

"ஆமாடா"

"யார்ரா சரோ?"

"என் உயிர்க் காதலி. பேங்க்ல வேலைசெய்றா"

"எந்த பாங்க்?"

"ப்ளட் பாங்க்" என்று சிரித்தான்.

நியூ ஹாஸ்டலில் வடக்கத்தி மாணவர்களிடையே கைகலப்பு நேர்ந்தபோது ரமணி இடையே புகுந்துகையெடுத்துக் கும்பிட்டு சண்டையைச் சரளமாக இந்தி கவிதைகள் பேசி நிறுத்தினான். மற்றொருசந்தர்ப்பத்தில் ப்ரேம் மல்ஹனை வெட்டக் கத்தியை எடுத்துக்கொண்டு துரத்தினான். வளாகத்தில்ஓடிப்பிடித்து அவன் கழுத்தில் கத்தி வைத்துவிட்டு சற்று யோசித்து, "கை குடு! வியாழக்கிழமைநான் கொல்றதில்லை" என்றான்.

முதல் செமஸ்டருக்குள்ளே அவனைக் கண்டாலே மற்ற மாணவர்களும் ஆசிரியர்களும் அலறத்தொடங்கி னார்கள். கிளாசுக்கு வரும்போது ஒரு ஜிம்மி நாய் கூட வந்து காத்திருக்கும். சிலவேளைஉள்ளே எட்டிப் பார்க்கும். "வரேண்டா அவசரப்படாதே".

யாரைச் சந்தித்தாலும் கையை முதுகுப் பக்கம் முறுக்கி வலிக்கிறாற் போல் செய்துவிட்டுத்தான்விடுவான். ஏதாவது பதில் சொன்னால் நேராக அடிமடி மர்மஸ்தானத்தில் கை செலுத்தித்திருகுவான். நாம் துடிப்பதைக் கண்டு கண்ணீர் வரச் சிரிப்பான். அதீத பலாத்காரன். தொடாமல்,அடிக்காமல், முதுகில் குத்தாமல், கன்னத்தில் தட்டாமல், அங்கே பிடிக்காமல் அவனால் பேசவேமுடியாது!

பரீட்சை பேப்பர் திருத்துபவரை ஒருமுறை ரயிலிலிருந்து தள்ளுவதாகப் பயமுறுத்தியதில், ரமணிஎல்லா சப்ஜெக்டிலும் பாஸ். கெமிஸ்டரி கிருஷ்ணசாமி ஒருமுறை வெற்றுப் பேப்பருக்குநாற்பத்தைந்து போட்டார். ஓரத்தில் இரண்டு வரிதான் எழுதியிருந்தான்... "பட்டா, மார்க்போடலை... தூத்துக்குடி எக்ஸ்பிரஸ்ல தள்ளிடுவேன்'.' தண்டவாளத்துக்குப் பக்கத்தில் இருந்ததால்அத்தனை ரெயில்களும் ஹாஸ்டலுக்கு அருகில் அலறிக்கொண்டு செல்லும்.
"எதுக்கப்பாபொல்லாப்பு, ரெண்டு பொண்ணு, வயசான அம்மா இருக்கா. கிறுக்குப் பய ஒண்ணு கிடக்க ஒண்ணுசெய்துட்டான்னா?" என்று மார்க் போட்டு விட்டார்.

திடீர் என்று ராத்திரி ஒன்பதரைக்கு "வா ஓடியன்ல புதுப் படம் போலாம்" என்று எல்லாரையும்திரட்டிக் கொண்டு ஸ்டேஷனுக்குப் போவோம். ரமணி,
"டிக்கெட் வாங்கிட்டு வரேன்" என்றுபடியேறிவிடுவான். ட்ரெய்ன் வந்து எல்லோரும் ஏறிக்கொள்ள அது நகர்ந்ததும் ரமணி எங்கள்தேசிய கீதமான "முண்டபக்கற மாரபக்கற ஓய் ஓய் ஓய்! சைதாப்பேட்டை க்ரோம்பேட்டை ஓய் ஓய்ஓய்!" சொல்லியபடி இறங்கி, "டேய் டிக்கெட் வாங்கலைடா, போய்ட்டு வாங்க" என்று டாட்டாகாட்டுவான்.

இவன் கொட்டம் தாங்க முடியாமல் அத்தனை பேரும் உள்ளம் கொதித்துக்கொண்டு இருந்தாலும்அவனை நேர்கொள்ளும்போது நேசிக்காமல் இருக்க முடியவில்லை. நம் எல்லோரிடமும் உள்ளகோகுல கிருஷ்ணனின் விஷம இச்சை காரணமாக இருக்கலாம்.

இந்நிலையில் முதன்முதலாகஆண்கள் காலேஜில் ஒரு பெண் லெக்சரராக சேரப்போ கிறாள் என்று தெரிந்தபோது கதிகலங்கிப்போனோம். எப்போது ராஜினாமா கொடுப்பா ள், மூணு நாளா… ஒரு வாரமா? என்று ரமணிஇல்லாதபோது பந்தயம் கட்டி னோம்.

“எலக்ட்ரானிக்ஸ் லெக்சரர்றா… ரமணி ஆட்டோ. அதனால ப்ரச்னை வராது” என்றேன்.

“ஹாஸ்டல்ல ரூம் கொடுக்கப் போறாங்களாம்.

“போச்சுரா.”

அவளை முதலில் ஸ்டேஷனில் வைத்துத்தான் பார்த்தோம். இந்த வருஷம்தான் பாஸ் பண்ணியிருக்க வேண்டும். படிப்பிலேயே கவனமாக, உடம்பை பார்த்துக்கொள்ளாமல் இருந்திருக்கிறாள் போல. மொத்தமே பத்து கேஜிதான் இருந்தாள். அஞ்சடிக்கு ஒரு அ ங்குலம்தான்மிஞ்சியிருந்தாள். பலமாக ஊதினால் விழுந்துவிடுவாள். ரமணி அவளை ஒற்றைக் கையால்தூக்கிவிடலாம். யாராவது காதலிக்க வேண்டும் என்றால் மிகுந்த கற்பனை வேண்டும் என்றுதோன்றியது. “குழந்தைடா அது” என்றான் நித்யானந்தன். ‘இரு’ என்றான் ரமணி. அவள் வந்துசேரும்போதே, ரமணியை சந்திக்கும் துரதிர்ஷ்டமா கிவிட்டது. சபர்பன் ரயில் நிலையத்தில் புதுஜமக்காளம் சுற்றின படுக்கையும் தகரப் பெ ட்டியும் நடுவயதுத் தந்தையுமாக வந்து இறங்கியபோது,ரமணி ரெயில்வே பெஞ்சில் சி கரெட் கடைக்காரனிடம் கடன் சொல்லிக்கொண்டு இருந்தான்.
“குடுக்கலைன்னா என்ன ரமணி? ஒண்ணாம் தேதி குடு. அதுக்கு எதுக்கு கையை முறு க்கறே!”

“எக்ஸ்க்யூஸ் மி! ஹாஸ்டலுக்கு எப்டி போகணும்?”

ரமணி சட்டென்று அஜித்குமாரின் கறுப்புக் கண்ணாடியை அணிந்துகொண்டு என் தோ ளைப்பிடித்துக்கொண்டு அருகே சென்று “ஐயா எனக்கு அனகாபுத்தூர் போகணும். மெ யின் ரோட்டுக்குபோகணும்… கண் தெரியலை. கூட்டிட்டுப் போறீங்களா?”

“ஸாரி ஸாரி” என்றாள்.

“இவன் பேரு மோகன்தாஸ் காந்தி. எனக்காகப் பரீட்சை எழுதுவான். ஸ்பெஷல் பர்மி ஷன் கொடுத்திருக்காங்க”

“மன்னிச்சுக்கங்க. நாங்களே குரோம்பேட்டைக்குப் புதுசு. உங்க பேர்?”

“அனகாபுத்தூர் அழகேசன்”.

அனைவரும் சிரிப்பை அடக்கி கொள்வதைப் பார்த்தாள்.

“அனகாபுத்தூரா?” என்று நான் வியக்க, “சும்மாரு” என்று அதட்டினான்.

“எதிர்லயே ஹாஸ்டல் தெரியறதே” என்றாள்.

“பர்ஸ்ட் இயரா நீங்க?” என்றான்.

“இல்லை, லெக்சரரா சேர வந்திருக்கேன்”.

“லெக்சரரா?” என்று அட்டகாசமாகச் சிரித்தான். தந்தை “ஜோதி! வா, கண்டவாளோட பேசாதே!”

ரமணி எழுந்து அப்பனின் சட்டையைப் பிடித்தான்.

“என் பேரு கண்டவன் இல்லை. மரியாதையா பேரு கேளு. தி நேம் இஸ் எல்.ரமணி”

“ஏய் சட்டையை விடு”.

ரமணி,
“டேக் இட் ஈசி. நீங்க போங்க சார். பாப்பா பயந்துக்கப் போறது. இப்படியே மேம்பாலத் தைக்கடந்தா அந்தப் பக்கம் குறுக்கு வழி இருக்கு”.

“என் பேர் கண்டவனாடா?”

“கண்டுக்காதே ரமணி”.

“வாம்மா, ஸ்டேஷன் மாஸ்டரைக் கேக்கலாம்”.

“கணபதி ஐயர்! உம்ம பொண்ணு எப்படி சேர்றான்னு பாத்துர்றேன்!” என்றபோது “என்ன நீ மரியாதைஇல்லாமப் பேசறே?” என்று அந்த பெண் ரமணியை அதட்டினாள். சற்று நேரம் பூமி சுழல்வதுநின்றது.

இளங்கன்று பயமறியாது என்று சொல்வார்கள். நாங்கள் பயந்துகொண்டு ரமணியை பார்க்க, அவள்யதார்த்தமாக,
“அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டர் இருக்கு. என்னைத் தடுக்க நீ என்ன டைரக்டரா?”

ரமணிக்கு இது புதுசு. இது வரை அவனை எதிர்த்தோ, ஏன் சமமாகவோகூட யாரும் பேசியதில்லை.

“வா ஜோதி”.

“ஜோதியா? கவனிச்சுக்கறேன்.”

ஜோதி ரிஜிஸ்ட்ராரிடம் பொறுப்பேற்ற கையோடு நடந்ததை ஒரு புகார் கடிதமாக எழுதிக்கொடுத்தாள். அப்போது ஆரம்பித்தது யுத்தம். டைரக்டர், ரமணியைக் கூப்பிட்டுவிசாரித்திருக்கிறார்.
“உன்னைப்பற்றி கேள்விப்பட்டிருக்கேன். ரொம்ப ப்ராக்டிக்கல். ஜோக்ஸ்செய்றியாம். மனசுக்குள்ள என்னன்னு நினைச்சுட்டிருக்கே? ஒழுங்கா படிச்சு வெளிய வரணுமா?டிஸ்மிஸ் ஆகணுமா?”

ரமணி தாசனுதாசனாக “சார் இனிமே அந்த மாதிரி கம்ப்ளெயிண்ட் வராது. இது உறுதி. எனக்குஎதிரிகள் யாரும் கிடையாது. விசாரிச்சுப் பாருங்க. ஸ்டேஷன்ல என் சாயல்ல ஒரு பிச்சைக்காரன்இருக்கான் சார். அவன் பேரும் ரமணி. அவனைப் பத்திதான் என் மேல குற்றம்சொல்லியிருக்காங்க. புதுசில்லையா? காலைலதான் ஊர்லருந்து வந்தேன்”

“அந்தக் கதையெல்லாம் வேண்டாம். ஸ்டேஷன்ல மிஸ் ஜோதிகிட்ட நீ நடந்ததுக்கு மன்னிப்புக்கேட்டு கடிதம் எழுது முதல்ல.”

“எழுதலைன்னா என்ன ஆகும் சார்... தெரிஞ்சுக்கலாமா?”

“உன்னை சஸ்பெண்ட் பண்ண வேண்டியிருக்கும்.”.

“வேண்டாம் சார். எங்கம்மா அப்பா உயிரை விட்டுருவாங்க. ரெண்டு பேருக்கும் ஹார்ட் வீக். எந்தபேப்பரைப் வேணா காட்டுங்க. கையெழுத்துப் போட்டுத் தரேன்.”

அந்தக் கடிதத்தில் “சாது ரமணதாஸ், கேம்ப் மெட்ராஸ் 44” என்று கையெழுத்துப் போட்டான்.

அந்தப் பெண் இரண்டாம் வருஷத்துக்கு எலக்ட்ரானிக்ஸ் பாடம் எடுத்தபோது வகுப்பில் வந்துரமணி உட்கார்ந்தான். அவனைப் பயத்துடன் பார்த்தோம்.

“ரமணி இது உன் க்ளாஸ் இல்லை”

“அட ஜோஜோ... எப்படி சொல்லிக் கொடுக்கறதுன்னு டைரக்டர் ரிப்போர்ட் கேட்டிருக்கார்”.

ஜோதி, “தி பீரியட் ஆ∴ப் தி மல்ட்டி வைப்ரேட்டர் இஸ் ஒன் பை ஸி ஆர்” என்றபோது, “உன் பீரியட்எப்ப?” என்றான். அவள் எழுதுவதை பாதியில் நிறுத்தி கரும்பலகையிலிருந்து திரும்பிப் பார்த்தாள்.
“ரமணி, இது உன் கிளாஸ் இல்லை. இப்ப வெளிய போ” என்றாள்.

“நான் ∴பேகல்ட்டி மாத்திட்டேன். இப்ப எலக்ட்ரானிக்ஸ்”.

“கிளாஸ் ரிஜிஸ்டர்ல உன் பேர் இல்லை. போ... கெட் அவுட்.”

“நீயே எழுதிக்க என் பேரை. எல்.ரமணி. டி.நம்பர் 504. இல்ல கொடு, நான் எழுதறேன்”.

ரிஜிஸ்தரில் தன் பெயரை எழுதினான்.
''லேடி லேடி, எங்கிட்ட வாடி. எல்லாம் சொல்லித் தாடி''

ஒரு கணம் அவனையே கோபமாகப் பார்த்தாள். அந்த எளிய முகத்தில் அத்தனை கோபம்தான்சாத்தியம் என்பதுபோல் சட்டென்று கண்களில் நீர் நிரம்பியது. எத்தனை சபைகளில் எத்தனைப்பெண்கள் அவமானப்பட்டிருக்கிறார்கள். அவர்களது ஒட்டுமொத்தமான பிரதிநிதிபோல சரித்திரம்கடந்து சற்றுநேரம் நின்றாள். பிறகு சாக்பீஸ் கையைத் துடைத்துக்கொண்டாள்.

''தங்கைகளைப் படிக்கவெக்க முதமுதலா வேலைக்கு வந்து சேர்ந்திருக்கேன். ஏன் இப்படிப்படுத்தறீங்க?'' என்றாள்.

ரமணி ''டேய் படுத்தாதீங்கப்பா. எத்தனை தங்கைங்க?'' என்றான். சிகரெட் பற்றவைத்தான்.பெஞ்சின் மேல் கால் போட்டுக்கொண்டு ஊதினான். எதிர்பாராதவிதமாக ஜோதி என்னைப் பார்த்து, ''576, நீ போய் ரிஜிஸ்ட்ராரைக் கூட்டிட்டு வாப்பா'' என்றாள்.

ரமணி என்னைப் பார்த்து, ''ரங்குஸ், பலி விழும்' என்றான்.

நான் மௌனமாக இருக்க,
''கிளாஸ்ல நாப்பது பேர் இருக்கீங்க.. யாருக்கும் தைரியம் இல்லையா?''என்றாள். துரியோதனின் சபைபோல மௌனம்,.

''நான் போறேன் மிஸ். எங்கிட்ட லெட்டர் குடுங்க'' என்றான் ரமணி

அவளே போர்டை அழித்துவிட்டு டைரக்டரைச் சந்திக்கச் சென்றாள்.

மறுநாள் நோட்டீஸ் போர்டில் எல்.ரமணியின் மேல் மூன்று குற்றச்சாட்டுகள் பட்டியலிட்டிருந்தது.
'தப்பான வகுப்பறையில், தவறான வார்த்தைகள் பேசினது, வகுப்பில் புகை பிடித்தது. விசாரணைமுடியும் வரை ரமணிக்கு வகுப்புகளில் நுழைய அனுமதி இல்லை' என்று அறிவித்தது.

அதன் பிரதியை ப்யூன் கொண்டு வந்து கொடுக்க ரமணி அவனைத் துரத்தி அடித்தான். ''வக்காளி,எனக்கு நோட்டீஸ் குடுக்க வைஸ் சான்சிலர் தாண்டா வரணும். எல்லாத்தையும் எல்லாரையும்பத்தவைக்கிறேன் பாரு. சிட்டில உள்ள அத்தனை காலேஜ்லயும் ஸ்ட்ரைக்' என்று ஆபீஸ்வளாகத்தில் சத்தம் போட்டான்.

அப்படி ஏதும் நிகழவில்லை. ஹாஸ்டலிலிருந்து புறப்பட்டுச் சென்றான். நடுராத்திரியில் திரும்பிவந்து ஜோதி தங்கியிருந்த ஹாஸ்டல் அறைக்கு முன் சத்தம் போட்டான். ''வெளிய வாடி ஏய்!''என்று கல்லெறிந்தான். புது ஹாஸ்டல் கட்டுவதற்காகக் கட்டியிருந்த தற்காலிக நீர்த் தொட்டியில்குதித்து ஈரமாக வந்து அவள் கதவைத் தட்டினான். ''ஜோதி ஏய் ஜோதி, ரியலி சாரி ஜோதி. எனக்குப்பேதி ஜோதி. நான் ஏன் அப்படின்னு வெளிய வந்தா சொல்றேன். ஐ லவ் யு ஜோதி!''

அந்த அறை இருட்டாக மௌனமாக இருந்தது. முதல் மாடியிலிருந்து டிசௌஸா, மொரைரா,வெங்கடேசன், நான் எல்லோரும் அவனைச் சமாதானப்படுத்தி அழைத்துச் சென்றோம். அந்தஅறையில் சலனமே இல்லை. பாவம் அந்தப் பெண், கிலியில் நடுங்கிக் கொன்டு சுருண்டுஉட்கார்ந்திருக்க வேண்டும்.

ஹாஸ்டலிலிருந்து வகுப்பறைக்குச் செல்லும் பாதையில் சரக்கொன்றை மரங்களும் செம்பருத்தியும் நிழல் தரும் ஃபுட்பால் மைதானத்தில் ஒரு டக்கோட்டா ஏரோப்ளேன் இருக்கும்.பேருந்துகளின் பணிமனை ஒன்று இருக்கும். ஜோதி அவ்வழியே தன் வகுப்புக்குப் பாடம் எடுக்கச்சென்ற போது, ஒரு புல்லட்டில் கடகடவென்று புழுதி பறக்க ஓட்டிவந்து அவளருகில் சுற்றி நிறுத்தி, ''வா வா, க்ளாஸ்ல கொண்டுவிடறேன்''. அவள், ''என்கூட பேசாதே'' என்று விரைவாக நடக்க,அடிக்கடி த்ராட்டிலை விர்விர் பண்ணிக் கொண்டு பாடிகார்டு போல கூடவே ஓட்டி வந்தான்.

அவள் மேலாடைத் தாவணியைப் பிடித்து இழுத்ததாக ஜோதி தன் புகார் கடிதத்தில், போலீஸ்எழுதச் சொன்னார்கள். பாதுகாப்பு கேட்டிருக்கிறாள். பல்லாவரம் ஸ்டேஷனிலிருந்து இன்ஸ்பெக்டர்வந்தார். டைரக்டரின் அலுவலகத்திலும் அவர் க்வார்ட்டர்ஸிலும் போலீஸ்காரர்கள் நின்றார்கள்.டைரக்டருக்கு மகா கோபம். மன்னிப்பே கிடையா

து என்று வி.சி. ஆபிஸக்கு எழுதி பர்மிஷன்வாங்கி கேம்பஸைவிட்டு நீக்கி மூணு வருஷம் ரஸ்டிகேட் பண்ணும்படி சிபாரிசு செய்தார். லெக்சரர்டி.எம்.டி. ஜோதியைப் பலாத்காரம் செய்த குற்றத்துக்காக அவனை அரெஸ்ட் பண்ண போலீஸ்வாரண்ட்டுடன் வந்திருந்தார்கள்.

ஹாஸ்டலில் ரமணியைத் தேடினால் காணவில்லை. மாணவர்கள் அனைவரும் பரபரப்பாகமுடிச்சு முடிச்சாகக் கூடி இருக்க, டைரக்டரிடம் இந்த தடவை மன்னிக்குமாறுவேண்டிக்கொண்டோம்.

அவர்,
"படிக்கிற பையன், ரேங்க் வாங்குற பையனுக்கு மன்னிப்பு கேளுங்கப்பா. இந்தப் பொறுக்கிஎல்லாரையும் கொடுமைப்படுத்திருக்கான். இவனை யாராலயும் காப்பாத்த முடியாது.".

"இருந்தாலும் இத்தனை கடுமையாத் தண்டிக்கணுமா?"

"இது குறைந்தபட்சத் தண்டனை. யூனிவர்சிட்டி ரூல்ஸ் அப்படி" என்றார்.

"யாராவது ரமணிகிட்ட போய்ச் சொல்லி ஊருக்குப் புறப்பட்டுப் போகச் சொல்லிரலாம்" என்றுயோசனை சொன்னார்கள்.
"இல்லைடா, அவனை ஒருமுறை உள்ள தள்ளினால்தான் புத்தி வரும்"

"மூணு வருஷம் டிபார் பண்றது தப்புடா. அவன் வாழ்க்கையே பாழாகிடும்".

ரமணி லோக்கல் ட்ரெய்னிலிருந்து இறங்கி தூரத்தில் வந்துகொண்டு இருக்க, அவனை நோக்கிஓடினேன்.
"ரமணி இப்படியே ஊருக்குப் போய்டு. உன்னை அரெஸ்ட் பண்ண போலீஸ்வந்திருக்காங்க."

"அப்படியா? வெரிகுட் வெரிகுட்... எங்க?"

"டைரக்டர் ஆபிஸ்ல... போய்டுரா."

"தேவையில்லை. யார் அந்த இன்ஸ்பெக்டர்? விசாரிக்கிறேன்."

"ரமணி உன்னை மூணு வருஷம் டிபார் பண்ணிருக்காங்க. ஜெயில்ல போடுவாங்க. இதுவிளையாட்டில்லை புரியுதா?"

"என்னடா தப்புப் பண்ணிட்டேன்? எதுத்தாப்பல பஸ் வருது. ஒதுங்கிக்கன்னு அந்தப் பொண்ணைத்தொட்டேன், அவ்வளவுதான்".

"நம்பச் சொல்றியா? ஏன் இப்படி மரமண்டையா இருக்கே ரமணி?"

"பாரு, நம்பாட்டிப் போங்க. ஐ டோண்ட் கேர்".

"ரமணி சாரிடா".

"நானே சாரி இல்லை. நீ ஏண்டா சாரி. ஜோதி அக்கா... எப்படி இருக்காங்க?"

"பயத்துல இன்னிக்கு பூரா கிளாஸ் வரலை. டைரக்டர் ஆபீஸ்லயே இருக்காங்க."

"போய்ப் பார்த்தாகணும்".

"வேண்டாம் ரமணி".

"போடா!"

டைரக்டர் ஆபீசில் எதிர்ப்புக் குரல் கொடுத்தோம்.
"ரமணி ரமணி' என்று கோஷமிட்டதும் ரமணிஅரசியல் தலைவன்போல வணங்கிவிட்டு 'உங்களுக்கெல்லாம் நண்பர்களே, ரோஷமுள்ளவர்களே!நாட்டுக் கட்டைகளே! என்மேல இருக்கிற அக்கறைக்காக ஆளுக்கொரு ஏக்கரா நிலம் ஜூலியஸ்சீஸர் உங்களுக்கு கொடுத்தாச்சு பழவந்தாங்கல்ல. தட்டுங்கடா கையை! வாழ்க ஜோதிபாய்.மெஸ்ல நெய் ரோஸ்ட் போடச் சொல்லு. இப்ப வந்துர்றேன்" என்று உள்ளே சென்றான்.

உள்ளே என்ன நடந்தது என்று தெரியவில்லை. ஒரு மணி நேரம் கழித்து முதலில் இன்ஸ்பெக்டர்வெளியே வந்து ஜீப்பில் ஏறிக்கொண்டார். கண்களைத் துடைத்துக் கொண்டு ரமணி மெல்லத்தான்வெளியே வந்தான். அவன் கையில் விலங்கு மாட்டினதுபோல் கர்ச்சீப் கட்டியிருந்தான். அதைச்சடுதியில் பிரித்து அவிழ்த்து,
“த்ரீ சியர்ஸ் டு ஜூலியஸ் சீஸர், ஹிப் ஹிப் ஹ§ர்ரே, முண்ட பக்கறமார பக்கற ஓய் ஓய் ஓய்!” சொல்லிவிட்டு இரு கைகளையும் உயர்த்தி “கை தட்டுங்கடா. எல்லாஆர்டரையும் வாபஸ் வாங்கிட்டாங்க. போலீஸ் கேஸ§ம் வாபஸ்”.

நாங்கள் குதூகலத்துடன் “என்னம்மா...எப்படி?”

“ஒரே ஒரு பொய் சொன்னேன். சால்வ் ஆயிருச்சு. நமக்குக் கைவந்த கலையாச்சே”

“என்னடா சொன்னே?”

“எனக்கு லுக்கிமியா... ஆறு மாசத்தில சாவப்போறேன். அந்த துக்கத்தை மறக்கத்தான் இந்த தமாஷ்எல்லாம் செய்தேன்னேன். டைரக்டர் அப்படியே அழுதுட்டார். அந்தப் பெண்ணும் தேம்பித் தேம்பிஅழுதுது. பாரு எம்மேல சாஞ்சுகிட்டு அழுததில சட்டையெல்லாம் ஈரம்! எல்லா புகாரையும் வாபஸ்வாங்கிடுத்து. இன்ஸ்பெக்டர்கூட புறப்படறப்ப ஓரக்கண்ணைத் துடைச்சுகிட்டுத்தான் போனார்.பாத்தியா? இந்தா சாப்பிடு” என்று வேர்க்கடலை கொடுத்தான்.

அதை உடைத்தபோது உள்ளே எதிலும் பருப்பு இல்லை! ரமணியின் மற்றொரு ஏமாற்று வித்தை.

“டேய் போறுண்டா. இனிமேலாவது பொய் சொல்றதை விட்டுருடா.”

“பொய்தாண்டா என் உலகத்தை சுவாரஸ்யமாக்கறது. பொய் இல்லைன்னா வாழ்க்கையே ...உலகமே இல்லை!” என்றான்.

மூன்றாவது செமஸ்டருக்குள் ஜோதி ராஜினாமா கொடுத்து விட்டாள். கல்யாணம் பண்ணிக்கொண்டு அமெரிக்கா போய் விட்டதாகச் சொன்னார்கள்.

ஊருக்குப்போன ரமணி மூன்றாவது செமஸ்டருக்கு வந்து சேரவே இல்லை. அதன்பின் அவனைநாங்கள் பார்க்கவே இல்லை. ஏன் என்று விசாரிக்கப் பயமாக இருந்தது.

This document was created with Win2PDF available at http://www.win2pdf.com.
The unregistered version of Win2PDF is for evaluation or non-commercial use only.
This page will not be added after purchasing Win2PDF.